விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 22 புதன்கிழமை (08.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோகும் அச்சத்தில் சஜித் சபை நடவடிக்கையில் கலந்து கொள்வார்

### அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ



(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் பதவி பறிபோகும் என்ற அச்சத்தால், சபை நடவடிக்கைகளில் சஜித் பிரேமதாஸ விரைவில் கலந்துகொள்வார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், ஐக்கிய மக்கள் சக்தி சபை நடவடிக்கைகளை புறக்கணித்துள்ள நிலையில், சபைக்கு ரணில் வந்திருப்பதால் அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மிகுந்த அச்சத் 15

### பாராளுமன்றத்துக்கு
## ரணில் வருகை; சஜித் புறக்கணிப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்றும் தனது சபை நடவடிக்கையை புறக்கணித்தது.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை சபை நடவடிக்கையில் பங்குபற்ற மாட்டோம் என சஜித் 15

## கொரோனா +748

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 748 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று 15

# நாட்டையும் மீட்டோம் வீட்டையும் காத்தோம்

## நல்லாட்சி அரசாங்கம் தொடர்பில் சபையில் ரணில் எடுத்துரைப்பு



*(கொழும்பு)* எங்கள் ஆட்சியில் நாம் நாட்டு பொருளாதாரத்தை மட்டுமல்ல வீட்டுப் பொருளாதாரத்தையும் பாதுகாத்தோம். மக்களுக்கு மூன்று வேளைகளும் சாப்பிடக்கூடிய நிலைமை காணப்பட்டது. சமையல் அறையின் பாதுகாப்புக்கூட உறுதிப்படுத்தப்பட்டது. அங்கு வெடிப்புகள் எதுவும் இடம் பெறவில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### நுவரெலியாவில்
## 5 எரிவாயு அடுப்புகள் வெடித்தன

(நுவரெலியா)

நுவரெலியா நகரம் மற்றும் நுவரெலியா மாகொட ஆகிய பிரதேசங்களில் உள்ள 5 வீடுகளில் நேற்று 15

## மாதகலில் பொதுமக்களுக்கு தொடரும் அச்சுறுத்தல்

### காணி அபகரிப்புக்கு எதிராக போராடியவர்களை குறிவைக்கும் புலனாய்வு

(அராலி)

மாதகலில் காணி அபகரிப்பு பிரச்சினைகளுக்கு எதிராக தொடர்ந்து செயற்படும் பொது மக்களுக்கும் செய்தி சேகரிக்கச் செல்லும் 15

## மாதகலில் காணி அபகரிப்புக்கு எதிராக போராடியவர்களை

### கஞ்சா கடத்தல் என கைது செய்த கடற்படை

(யாழ்ப்பாணம்)

மாதகலில் காணி அபகரிப்புக்கு எதிராக போராடியவர்களை கஞ்சா கடத்தல் என கூறி கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாதகலில் கஞ்சா 15

## கொரோனாவால் வடமேல் மாகாண ஆளுநர் மரணம்

(கொழும்பு)

கோவிட்-19 தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே 15

## பண்டிகை காலத்தில் தொற்றாளர்கள் அதிகரிக்கலாம்

### பொது சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்காத பட்சத்தில், நோய் பரவும் அபாயம் உள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்துள்ளனர்.

நாளாந்தம் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையை விட அதிகள 15

## சங்கானையில் வீடு புகுந்து 14 பவுண் நகை திருட்டு

(அராலி)

சங்கானை - நிற்சாமம், சிலம்பு புளியடி கோவிலுக்கு அருகே உள்ள வீட்டிலிருந்த 14 பவுண் நகை திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டில் உள்ளவர்கள் காலை 15

## வீடு ஒன்றுக்கு ஒரு மின்குமிழை அணையுங்கள்

### மின்சக்தி எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

உரிய முகாமைத்துவத்துடன் மின்சாரத்தை பயன்படுத்துமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு, மின் பாவனையாளர்களிடம் கோரிக்கை 15

## கொரோனாவால் 21 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 21 பேர் கோவிட்-19 தொற் 15

## நுண்கடன்களால் இலங்கையில் 200 பெண்கள் உயிரிழப்பு

### ஐ.நா. சபை தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு ஆய்வுக்கும் உட்படுத்தப்படாத நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று வட்டி செலுத்த முடியாமல் 200இற்கும் மேற்பட்ட இலங்கைப் பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ஐக்கிய நாடு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தர்மலிங்கம் விசாகன்

பிறப்பு: 05.02.1983 இறப்பு: 19.12.2020

ஆண்டொன்று மறைந்துவிட்டது
அகலுமா உன் பிரிவின் சோகம்
மறையுமா உன் நினைவின் பாசம்
எங்களை பரிதவிக்க விட்டு
எங்கு சென்றாய்?
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உன் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை
உன் நினைவுகள் தொடரும்.

"வதனி இல்லம்", வதிரி. (C-3191) குடும்பத்தினர்

# விழிநீர் அஞ்சலி



கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் நிலையப் பொறுப்பாளர் த.நிர்மலன் (சீனிக்குட்டி) அவர்களின் அன்புத் தாயார்

## புவனேஸ்வரி தனபாலசிங்கம்

அவர்கள் நேற்றுக் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:-
கொக்குவில் சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்
K.C.C.C & K.C.C.C Sports Club (8975)

# எதிர்க்கட்சியினர் இன்றுமுதல் சபை அமர்வுகளில் பங்கேற்கத் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இன்றுமுதல் பாராளுமன்ற அமர்வுகளில் மீண்டும் பங்கேற்க தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சபாநாயகருடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையை அடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்காரவிற்கு ஆளும் கட்சியின் சிலர் எதிர்ப்பை வெளியிட்டதுடன் தாக்க முற்பட்டதாகக் கூறி அவர்கள் பாராளுமன்ற அமர்வு புறக்கணிப்பை முன்னெடுத்தனர். (ம-3)

## கட்டைவேலி - நெல்லியடி பல. நோ. கூ. சங்கம் (வ.து)

### தற்காலிக பணியாளர்கள் ஆட்சேர்ப்பு


**கிராமிய வங்கி பயிற்சி முகாமையாளர், எரிபொருள் நிரப்புனர், எரிபொருள் நிரப்பு நிலைய காவலாளி**

மேற்படி பதவிகளுக்கு தற்காலிக பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர். இணைந்துகொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் எமது சங்க காரியாலய நேரத்தில் நேரடியாகப் பெற்று 22.12.2021 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

கலாநிதி ஐ. யோகராசா
தலைவர் (C-3192)

தொலைபேசி இல.
021 226 3263

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை செல்வராசா

(ஓய்வுபெற்ற உதவிப் பிரதேச செயலர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்வராசா நேற்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லாபரணம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கௌசலாதேவியின் அன்புக் கணவரும் நிறஞ்சலா (கனடா), துஷ்யந்தி (அவுஸ்திரேலியா), செந்தூர் (தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் - அனுராதபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராசா (கனடா), கணேசராசா (அவுஸ்திரேலியா), யபர்ணா (ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அர்ச்சுவினியா, கபேஷா, விகாஸ், ரிஷிகேசன், சாயிகௌசல்யா, சௌந்தரீகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கணேசரத்தினம், அரியராசா மற்றும் இராசமணி, புஸ்பலீலாவதி, மகேஸ்வரன், சிவயோகமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், புவனேஸ்வரி, தெட்சணாமூர்த்தி மற்றும் பொன்மணி, பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன், காசிநாதர் மற்றும் நித்தியானந்தன், விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கமலாதேவி, பரமேஸ்வரி, மனோன்மணி, ரஞ்சிதமலர் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்பகம்"
சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவில். (8977)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பேசி: 077 623 9837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளின் சுயநலன்களுக்காகவே உள்ளூராட்சி சபைகள் தோற்கடிக்கப்படுகின்றன

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளை தோற்கடித்து ஆணையாளர்களின் கீழ் சபைகள் கொண்டு வரப்படுமாயின், அதைப் போல ஒரு மோசமான நிலை இருக்காது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களின் செயற்பாடுகளில் பிழைகள் இருக்கலாம் அல்லது நன்றாக செயற்படுகிறார்கள் என மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் இருக்கலாம். இவற்றை உடைக்க வேண்டுமாயின் அவர்களை தோற்கடிக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் தங்களின் சுயநலத்தின் அடிப்படையில் தான் அவை தோற்கடிக்கப்படுகின்றன. தங்களின் கட்சி சார்ந்த தேவைகளுக்காகவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

உள்ளூராட்சி சபைகளின் காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் முடிவடையவுள்ள நிலையில் அதனை ஆறு மாத காலப்பகுதிக்கோ, அல்லது ஒரு வருட காலப் பகுதிக்கோ நீடிக்கக்கூடும் என நிச்சயமாக நம்புகிறேன்.

ஏனெனில் இன்றைய களச்



சூழலில் அரசாங்கம் புதிய தேர்தலை நடத்தும் நிலையில் இல்லை.

ஆகவே அவ்வாறான சூழலில் உள்ளூராட்சி சபைகளை தோற்கடித்து ஆணையாளரின் கீழ் சபைகள் கொண்டு வரப்படுமாயின், அதைப் போல ஒரு மோசமான நிலை இருக்காது என அவர் தெரிவித்தார். (நி-5-33)

# அடையாள இலக்கத்துடன் பிறப்புச் சான்றிதழ்கள்

## வழங்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் இலங்கை அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, எதிர்காலத்தில் புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும்போது இந்த அடையாள இலக்கம் வழங்கப்படும்.

இந்த அடையாள இலக்கத்தை, தேசிய அடையாள அட்டையை தயாரிக்க பயன்படுத்துவதற்கும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து செயற்பாடுகளின்போது, பொது மற்றும் தனியார் துறை சேவைகளை அணுகுவதற்கும் வசதியாக இருக்கும்.

முன்னதாக, ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அடையாள இலக்கங்களை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த நிலையில் இனிவரும் காலங்களில் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் தொகுதி மூலம் இணையவழி ஊடான இலங்கை அடையாள இலக்கத்தை பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு வழங்குவதற்கும் குறித்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மூலம் குறித்த நபர்களின் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலையை இடமாற்ற வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம்



(குப்பிழான்)

பிரதேசவாழ் மக்களுக்குப் பாரிய உயிராபத்துச் சேதங் களை ஏற்படுத்தக் கூடிய யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலி ண்டர் களஞ்சியசாலையை அவ் விடத்திலிருந்து உடனடியாகப் பொருத்தமான இடத்திற்கு இட மாற்ற வலியுறுத்தி மேற்படி பகுதியைச் சேர்ந்த ஐந்து பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் குறித்த களஞ்சிய சாலை முன்பாக நேற்றுச் செவ்வாய்க் கிழமை காலை 9 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "எங்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய எரிவாயுக் களஞ்சியத்தை அகற்று", "பாடசாலைச் சுற்றாடல் அமைதியாகக் கற்கவிடு! கற்கவிடு!", "அரச அதிகாரிகளே மக்கள் உயிருக்கு நீங்கள் பொறுப்பா?", "எமது உயிருக்கு யார் உத்தரவாதம்?", "தற்போதைய தரமற்ற எரிவாயு விநியோகத்திற்கு யார் பொறுப்பு?", "ஏழைகளின் உயிரா? பணபலமா?", "எங்கள் பிள்ளைகளின் உயிருடன் விளையாடாதே", "ஆரோக்கியமான சந்ததியாக நாம் வாழ வழி விடு" போன்ற பல்வேறு சுலோகங்களைத் தமது கைகளில் தாங்கியிருந்தனர். (நி-18-33-104)

# சபையில் வரவு-செலவுத் திட்டம்; நாட்டில் நிதி அமைச்சர் இல்லை

## ரணில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் திடீர் இந்திய விஜயம் தொடர்பான அனைத்து விபரங்களையும் வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நிதியமைச்சரின் திடீர் இந்திய விஜயம் கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேலும் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எந்தவொரு நிதி அமைச்சரும் நாட்டை விட்டு வெளியேறியதில்லை.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அனைத்து நிதி விபரங்கள் மற்றும் திட்டங்களை சபையில் முன்வைக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் நிதி அமைச்சருக்கும் உள்ளதாக சுட்டிக் காட்டிய ரணில் நாட்டின் தற்போதைய வெளிநாட்டு கையிருப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் சில நாட்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அதற்கான ஆவணம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)


## குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

**யூசைமுத்து பிலிப்**
இல.19, 2ம் குறுக்குத்தெரு,
பாரதி லேன்,
தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.

**-வழக்காளி-**

வழக்கு இல, விசேடம் 28/21

எதிராக

1. **மாவை.சோ.சேனாதிராசா**
**தலைவர்,**
இலங்கைத் தமிழரசுக் கட்சி,
தலைமை அலுவலகம்,
இல.16 (30), மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

2. **ப.சத்தியலிங்கம்,**
**பொதுச் செயலாளர்,**
இலங்கைத் தமிழரசுக் கட்சி,
தலைமை அலுவலகம்,
இல.16 (30), மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

3. **பெ.கனகசபாபதி,**
**பொருளாளர்,**
இலங்கைத் தமிழரசுக் கட்சி,
தலைமை அலுவலகம்,
இல.16 (30), மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

4. **M.B.M.சுபியான்**
**தெரிவத்தாட்சி அலுவலர்**
(உதவித் தேர்தல் ஆணையாளர்)
மட்டக்களப்பு மாநகர சபை,
தேர்தல் அலுவலகம்,
கச்சேரி,
மட்டக்களப்பு.

**-எதிராளிகள்-**

மேற்படி வழக்காளி சார்பில் சட்டத்தரணி எஸ்.செலஸ்ரீன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட விசேடம் **28/2021** என்ற இலக்க வழக்கில் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-4 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1ம் எதிராளி தலைவராகவும் 2ம் எதிராளி பொதுச் செயலாளராகவும் 3ம் எதிராளி பொருளாளராகவும் பதவி வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது **20.12.2021** ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திறந்த நீதிமன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதியாகிய இன்று.

மன்றின் கட்டளைப்படி

**சு.நடேஸ்வரன்**
**பதிவாளருக்காக மாவட்ட**
**நீதிமன்றம் யாழ்ப்பாணம்.**

(8698)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா பிறீமியர் லீக்

# காலியை சுருட்டியது கொழும்பு ஸ்டார்ஸ்

லங்கா பிறீமியர் லீக் இருபது -20 கிரக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் காலி கிளாடியேட்டர்ஸ்"க்கு எதிரான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 4 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில் காலி அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



எனினும் ஆரம்பம் முதலே கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் ஆக்ரோஷமான பந்துப் பரிமாற்றங்களுக்கு தாக்கு பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

அணி சார்பில் பெண்டாங்க் 38 ஓட்டங்களையும், இசுறு உதான 25 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது காலி கிளாடியேட்டர்ஸ்.

117 என்ற இலகுவான வெற்றியிலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் ஆறு விக்கெட்டுகளை காலி கிளாடியேட்டர்ஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் பதம் பார்த்தனர்.

இதனால் இலகுவான வெற்றி இக்கட்டான நிலைக்கு சென்றது.

எனினும் 18 ஆவது ஓவருக்காக நுவான் துஷார பந்துப் பரிமாற்றம் மேற்கொள்ள, மூன்றாவது பந்தில் சந்திமால் ஒரு பவுண்டரியை விளாசி அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

கொழும்பு ஸ்டார்ஸ் அணி சார்பில் சந்திமால் 26 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 24 ஓட்டங்களையும், டேவிட் வைஸ் 22 ஓட்டங்களையும் அதிகப்படியாகப் பெற்றனர். (4)

## கண்டியை வீழ்த்தியது தம்புள்ளை



லங்கா பிறீமியர் லீக் இருபது-20 தொடரின் இரண்டாவது லீக் போட்டியில், தம்புள்ளை ஜியண்ட்ஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு. ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், தம்புள்ளை ஜியண்ட்ஸ் அணியும் கண்டி வோரியஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தம்புள்ளை ஜியண்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை ஜியண்ட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 191 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கண்டி வோரியஸ் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 170 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், தம்புள்ளை ஜியண்ட்ஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 27 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட பிலிப் சோல்ட் தெரிவு செய்யப்பட்டார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2463

### தனேஷ்

மனைவி- ஏங்க போன ஜென்மத்துல நீங்க நிறைய புண்ணியம் செய்துருக்கிங்க போல...
கணவன் - எத வச்சு அப்பிடி சொல்லுறா?




மனைவி- இல்லாட்டி நான் உங்களுக்கு மனைவியாகிடைத்திருப்பேனா?

### சியாமளா




### கஸ்தூரி

அந்தப்பக்கம் காஸ் சிலிண்டர்கள் வெடித்து பறக்கின்றனவாம்.
இந்தப் பக்கம் ஒமிக்ரோன் உலவுகிறதாம்.
இங்கே நாடு முழுவதும் பவர் கட் பரிதாபமாம்.
ஐயோ முடியவில்லை ..படுத்துறானுகளே!!!



### தர்மிலன்

வாழ்க்கையில தான் எல்லா மூலையிலயும் இருட்டு என்டு பாத்தா



இங்க ஏரியால ரோட்டு நீட்டுக்கும் இருட்டா தான் கிடக்கு

### வதனி





காய்ச்சல்,அளவுக்கு அதிகமான சோர்வு,தசைகளில் வலி, தொண்டை கரகரப்பு, வறட்டு இருமல், இரவில் உடல் வியர்த்தல்

அடேய் கொஞ்சம் சும்மா இருங்கடா எனக்கு நீங்க சொன்ன எல்லாமே இருக்க மாதிரியே தோனுது...



### றியாஷ்

நீங்க அற்றண்டன்ஸ் எடுத்துற்று இருக்கும் போது



என் வாயை பொத்திற்று அப்சன்ற் என்று சொல்லிற்றாங்க சேர்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

08.12.2021
கார்த்திகை 22, புதன்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.39 மணிவரை
திருவோணம் பின்னிரவு 4.50 மணிவரை
சுபநேரம் 4.47-6.17 மணிவரை
இராகுகாலம் 12.17-1.47 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவாதிரை

வளவன்


**மேஷம்**
எதிர்பாராத வகையில் குடும்பத்தில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டு நிலை ஏற்படலாம்.


**ரிஷபம்**
பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கிடைக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


**மிதுனம்**
பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**கடகம்**
தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.


**சிம்மம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்துதவ முன்வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.


**கன்னி**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மனதில் புதிய சிந்தனை தோன்றும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


**துலாம்**
பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.


**விருச்சிகம்**
முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, உறவினர் பகை அகலும், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.


**தனுசு**
கோபதை குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், உறவினர்களின் நலன் கருதிய செலவுகள் ஏற்படலாம்.


**மகரம்**
இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பலரது அன்பிற்குப் பாத்திரமாவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைத் சந்திக்கும் வாய்ப்புண்டு.


**கும்பம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், அருமையான நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


**மீனம்**
எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தடைகள் விலகி தனவரவுகள் ஏற்படலாம், தேக நலன் சீராகும், நண்பர்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.

நீ நினைத்தால் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்

# வவு.வடக்கு பிரதேச சபை பாதீடு மீண்டும் தோல்வி

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம்ஆண்டிற்கான பாதீடு இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

பிரதேச சபையின் தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் நேற்று இடம் பெற்ற அமர்வில் பாதீடு தோற்கடிக்கப்பட்டது.

(4-5-250-299)


**வைத்தியம்**
**அக்குபஞ்சர் சிகிச்சை**

முள்ளந்தண்டு, நரம்பு, மூட்டு நோக்கள் அல்லது நசிவுகள், குழந்தையின்மை, சலரோகம், முட்டு, உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல்... நோய் எதுவாயினும் நிரந்தர தீர்வு

Shenmen Acupuncture Hospital
ஷன்ஸ் ஹெல்த் கெயார், கொக்குவில்
T.P. 077 035 7307
Dr.Shanker
(8936)


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2022

மேற்படி 2022 ஆம் ஆண்டிற்கான வழங்குநர் பதிவானது வழங்குநர் பதிவினை மேலும் ஊக்குவிக்கு முகமாக 15.12.2021 வரை கால நீடிப்புச் செய்யப்படுகின்றது என்பதனை அறியத் தருகின்றேன்.

**முதல்வர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3185)


# விமலம் திருமண சேவை

**மணமகள் தேவை**

01. வயது 36 கனடா சிற்றிசன் - ரோகினி பாவம் 62 செவ்வாய் 07 Diploma in Engineering work at QA Analyst.
02. வயது 32 இந்து அவிட்டம் 03ம் பாதம் பாவம் 27 செவ்வாய் 08 இல் கனடா சிற்றிசன்.
03. வயது 35 லண்டன் சிற்றிசன் விசாகம் பாவம் 16 செவ்வாய் இல்லை BSc Quantity Surveyoring work side engineer
04. வயது 31 லண்டன் சிற்றிசன் திருவோணம் பாவம் 30 Network Engineer செவ்வாய் இல்லை.
05. வயது 31 பாவம் 22 பட்டதாரி கனடா சிற்றிசன்.
06. வயது 28 கனடா சிற்றிசன் விசாகம் 1 ம் பாதம் செவ்வாய் 07 இல் பாவம் 45 Machine operator உயரம் 5'1".
07. வயது 28 கனடா சிற்றிசன் விசாகம் பாவம் 40 செவ்வாய் 04.
08. வயது 26 கனடா சிற்றிசன் பரணி பாவம் 26 1/2 Truck Driver.

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/மணமகள் தேவையெனின் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 076 349 0083, 076 910 4096, 14372446737 கனடா

(8964)


## கேள்வி கோரல் - 2022
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி -சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் நடத்துவதற்குப் பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல்கள் வரவேற்கப்படுகின்றன.

கேள்வி கோரல்களுக்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத செலுத்துகையான ரூபா 500 ஐ 09.12.2021 ஆம் திகதி முதல் 20.12.2021 ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் இடையில் கல்லூரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை தகைமை, அனுபவ நற்சான்றிதழ்களுடன் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 24.12.2021 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன்பாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் - 2022" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

கிடைத்த கேள்வி கோரல்கள் யாவும் 27.12.2021 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்பட்டு தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.

பிற்குறிப்பு: முற்று முழுதாகத் தரமான ஆரோக்கிய உணவு வகைகளை (Healthy Foods) வழங்க முன்வரும் ஒப்பந்தக்காரருக்கு எமது கட்டணத்தில் பொருத்தமான விலக்கு அளிக்கப்படும்.

தலைவர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
021 222 2431

(C-3184)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்டிக்கர் ஒட்டும் பொலிஸார்



(யாழ்ப்பாணம்)


வீதி விபத்துக்களை குறைப்பதற்காக "உங்களின் பாதுகாப்பிற்காக நாம்" எனும் கருப்பொருளில் துவிச்சக்கர வண்டிகளில் ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கே.கே.எஸ். பிரதான வீதியிலுள்ள சுன்னாகம் சந்தி வீதியினால் சென்ற துவிச்சக்கர வண்டிகள் பொலிஸாரினால் நிறுத்தப்பட்டு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியச்சகரின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு மற்றும் சுன்னாகம் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையினை நேற்று முன்னெடுத்தனர்.

ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கையில் சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஈ.எம்.பி.ஏக்கநாயக, யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அபேயரத்ன உள்ளிட்ட பொலிஸார் கலந்து கொண்டனர். (5-4-33)

# அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு யாழில் இரு வெற்றியாளர்கள்





(குப்பிழான்)

தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் ஒரு கோடி ரூபாய் வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுத் தொகை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை 06.12. 2021 வழங்கப்பட்டது.

அந்த வகையில் மஹஜன சம்பத சீட்டிழுப்பில் ஒருவருக்கு ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாவும், மெகா பவர் வெற்றிச் சீட்டிழுப்பில் ஒருவருக்கு ஒரு கோடி ரூபாவும் கிடைத்துள்ளது.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுக் கூப்பனை வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் தேசிய லொத்தர் சபையின் நிர்வாக இயக்குநர், பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-18)

# விருது வென்ற 'நிலம்' குறும்படம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ்த் தேசத்தில் "எமது நிலம் எமக்கு வேண்டும்" என நில அபகரிப்புக்கு எதிரான குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்து வரும் நிலையில், அபகரிப்புக்குள்ளான சொந்த நிலத்தின் ஏக்கத்தை பேசுபொருளாகக் கொண்ட "நிலம்" குறும்படம் சிறந்த குறும் படத்துக்கான விருத்தினை வென்றுள்ளது.

தமிழ்நாட்டின் நீலகிரி ஃபிலிம் கிளப் மற்றும் பி.சி டி.வி- நெட்வொர்க் அமைப்புகள் நடத்தும் ஊட்டி குறும்பட விழாவிலேயே 2021 ஆம் ஆண்டின் சிறந்த குறும்படத்துக்கான விருதினை வென்றுள்ளது.




32 நாடுகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட குறும்படங்கள் பங்கெடுத்திருந்த ஊட்டி குறும்பட விழாவில் 'நிலம்' சிறந்த படத்துக்கான விருதினை பெற்றுள்ளது. (5-33)

# அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 09 நிகழ்வின் 56 ஆவது கதையாடல் நிகழ்வு இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய கல்வி நிறுவகம் அழகியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி றாகினி திருக்குமரன் அரிதார அரம்பையர் (தேவரடியார் பற்றிய சமூகப் பார்வை) என்னும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார் .

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-6)



மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய தொழில் வழிகாட்டல் வாரப் போட்டி நிகழ்ச்சிகளிற்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு உதவி மாவட்டச் செயலாளர் திருமதி.எஸ்.சி.என்.கமலராஜன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(படம்:-ரவிசாந்)

# யாழ்.கொட்டடிப் பகுதியில் மோட்டார் குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட கொட்டடி-மீனாட்சி அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து சக்திவாய்ந்த மோட்டார் குண்டு ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டது. தனியாருக்கு சொந்தமான குறித்த காணியை காணியின் உரிமையாளர் சுத்தம் செய்யும்போது அக்காணியில் குறித்த வெடி குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து காணியின் உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளார். குறித்த மோட்டார் குண்டானது நீதிமன்ற அனுமதியின் பின்னர் மீட்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(5-4-33-104)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சிவ கந்ததாஸக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6)

# சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் கைது

(சாவகச்சேரி)

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை மோட்டார் சைக்கிளில் அழைத்துக் கொண்டு சாவகச்சேரிப் பகுதியில் சுற்றிய 30 வயது இளைஞன் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய போதே இவ்வாறு கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். குறித்த சிறுமி கடந்த 5 ஆம் திகதி முதல் அவரது வீட்டில் இருந்து காணாமல் போயிருந்த நிலையில் இவ்வாறு சாவகச்சேரி பொலிஸார் நுணாவில் பகுதியில் வைத்து சிறுமியை மீட்டுள்ளனர். (5-4-36)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 380 | 400 | 320 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 550 | 500 | 500 | 500 |
| தக்காளி | 600 | 400 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 350 | 350 | 400 | 400 |
| கரட் | 280 | 330 | 360 | 400 |
| பூசணி | 60 | 50 | 60 | 80 |
| புடோல் | 250 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 160-200 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 600 | 550 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 360 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 150 |
| பயற்றங்காய் | 450 | 500 | 450 | 400 |
| லீக்ஸ் | 350 | 330 | 360 | 400 |
| பீற்றூட் | 160 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | -- | 450 | 200 | 500 |
| முருங்கைக்காய் | -- | 800 | -- | 800 |
| போஞ்சி | 350 | 340 | 360 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | -- | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 80 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 250 | -- | -- |
| முள்ளங்கி | 140 | 140 | -- | 240 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 70 | 50 |
| வல்லாரை | 25 | 25 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலங்களில் கொரோனா வேகமெடுக்கும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**பண்டிகைக் காலங்களில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் ஜனவரி மாதத்திற்குள் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அச்சங்கத்தின் செயலாளர் கலாநிதி செனல் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் கவனக்குறைவான நடத்தை காரணமாக ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து பொதுமக்களுக்கு ஏற்கனவே அனுபவம் உள்ளது.

பண்டிகைக் காலங்களில் கொரோனாத் தொற்றினை பொதுமக்கள் அலட்சியமாக எண்ணினால் அது மேலும் பரவுவதற்கு வழிவகுக்கும். எனவே பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் செனல் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டார். (நி)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசும் வாய்ப்பை பறிக்காதீர்கள்

## சபையில் கூட்டமைப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான பிரதான எதிர்க் கட்சியினர் சபை அமர்வுகளைப் புறக்கணித்திருந்த நிலை யில், எமக்கான வாய்ப்பையும் தட்டிப் பறிப்பது நியாயமில்லை.

எனவே வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைகளை சபையில் பேச எமக்கு அனுமதிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் வலியுறுத்தியது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெறவிருந்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை அமைச்சு , நகர அபிவிருத்தி கழிவுப் பொருட்களை அகற்றுதல் மற்றும் சமு தாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு, கரையோர பாது காப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தை நடத்துவதில் எதிர்க்கட்சியினரால் தடை ஏற்படுத்தப்பட்டதை அடுத்து விவாதமின்றி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை நிறைவேற்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த விவாதத்தில் உரையாற்றத் தயாராகவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் விவாதங்களும் நிறுத்தப்பட்டதால் சபையில் கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பியிருந்தனர். (நி)

# அடுத்த ஆண்டு பிரதமர் பதவியில் மாற்றம்?

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் பிரதமர் பதவியில் மாற்றம் வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுவது அடிப்படை ஆதாரமற்றது என அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 2022 ஆம் ஆண்டு பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது பசில் ராஜபக்ஷவுக்கோ வழங்கும் திட்டம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் வெளிநாட்டு உறவுகளை வலுப்படுத்தவும் வெளி நாட்டுக் கடன்களைப் பெறவும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கும் திட்டம் உள்ளதா? எனவும் அவர் கேட்டார். இதற்கு பதிலளிக்கும் போதே இந்த விவகாரம் அடிப்படை ஆதாரமற்றது என அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (நி)

# இரண்டுகோடி பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது

(வவுனியா)

இரண்டுகோடி ரூபாய் பெறுமதியான 145 கிலோ கேரளக் கஞ்சாவினை கடத்திச்சென்ற இருவரை கைது செய்துள்ளதாக ஓம ந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கூலர் ரக வாகனத்தை நேற்று பிற்பகல் வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழிமறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 145 கிலோ கேரளக்கஞ்சாவினை மீட்டதுடன், வாகனத்தையும், அதில் பயணித்த சாரதி உட்பட இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-299)

# பிரியந்தவின் குடும்பத்திற்கு 2.5 மில்லியன் ரூபாய் இழப்பீடு

(கொழும்பு)

பாகிஸ்தானின் சியால்கோட்டில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு 2.5 மில்லியன் ரூபாய் இழப்பீடு செலுத்துவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை இணை செய்தி தொடர்பாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக ரமேஷ் பத்திரன நேற்று தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஊடாக பணம் செலுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 12 சூரி 10 இல்
தகைமை/தொழில்: A/L Commerce Cashier(Officer-Grade)
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/12175

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: செவ் 3 சூரி 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc SoftWare Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி கொழும்பில் வசிப்பவர் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்
தொ.இ:B/12176

பிறப்பு : 1980 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 12 செவ் 10 சூரி 8 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: கடை கமம்
எதிர்பார்ப்பு: சாதாரண தரம் படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12177

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 33 ½ செவ் 5 சூரி 7 இல்
உயரம்: 5'6'
தகைமை/தொழில்:MSc Civil Engineering UK
எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்
தொ.இ: B/12178

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 39½ செவ் 12 சூரி 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: தகவல் தொழில்நுட்ப உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் அல்லது அரச உத்தியோகம்
தொ.இ:G/12064

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3
கி.பா: 54 செவ் 7 சூரி 7 இல்
உயரம்: 166 cm
தகைமை/தொழில்: AL, சுயதொழில் விவாகரத்துக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் அல்லது விவாகரத்தானவர் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ:G/12067

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 1 சூரி 3 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L Oniline Business
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12068

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 22 ¾ செவ் 12 சூரி 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Computer Science IT
எதிர்பார்ப்பு: பட்டதாரி. உயர் பதவி
தொ.இ:G/12074

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 17.08.1988-13.05.2021 வரையான 33 வருடங்க

# நிறைவு செய்து 08.12.2021 இன்று புதன்கிழமை பணிநி

# பகுதித் தலைவர் திரு.மயிலு இரங்கநாதன் அவர்க

## நல்லாசானுக்கு அருளாசியுரை



மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் தெய்வத்திற்கு முன்னிலையாக ஆசிரியர் விளங்குகின்றார். இவ்வகையில் எமது மண்ணில் தனது பணியில் ஆரம்பக் காலம் தொட்டு இற்றை வரையில் சிறப்பாகத் தன்னைக்காட்டி வரும் திரு. மயிலு இரங்கநாதன் அவர்களது பணி போற்றுதற்குரியது. இன்று தனது அகவை அறுபதின் மணிவிழா நாயகன் தனது ஆசிரிய சேவையில் 33 வருடங்களைக் கடந்த சேவையை மேற்கொண்டமை பாராட்டுதற்குரியது. தமிழ்ப்பாட ஆசிரியராக, பாடசாலை நிகழ்வுகளின் அறிவிப்பாளராக, தொகுப்பாளராக, சிறந்த நாடக நெறி யாளராக, கவிதை, கட்டுரை புனைபவராக கவியரங்கம், பட்டி மன்றங்களில் தனக் கென ஒரு தனி முத்திரை பதித்தவராக திகழ்கின்றார் ஆசிரியர் மயிலு இரங்கநாதன் என்றால் அதில் மிகையில்லை. இவற்றுக்கு மேலாக சிறந்த சிவபக்தன். பொதுச் சேவைகளில் தன்னாலான வகிபங்குகளைச் சிறப்பாக ஆற்றி நிற்பவர். இன்றைய நாளில் ஆசிரிய சேவையில் தன்னிறைவு கண்டு மணிவிழாக் காணும் திரு. மயிலு இரங்கநாதன் ஆசிரியர் அவர்கட்கு பர்வதபத்தினி சமேத நடராஜ இராமலிங்கம் பெருமானின் அருளாசி கிடைக்க வேண்டும் என இறைவனைத் துதித்து வணங்கி நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்

**சிவஸ்ரீ. ந. யோகானந்தேஸ்வரக்குருக்கள்,**
**பிரதமகுரு, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானம்.**

## மணிவிழா நாயகனுக்கு வாழ்த்து



இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையின் பணிகளுக்காக வளமான, தரமான ஆளணியினருக் கான தீவனாவிய தேடலின் போது யாழ். கல்வி வலயத்தின் முன் னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். ரவீந்திரநாதன் அவர்க ளால் வினைத்திறனும் விளைதிறனும் மிக்கார் என இனங் காணப்பட்டவர். அழைக்கும் போதெல்லாம் அதிக சிரத்தையுடன் தலைநகர் வந்து தனித்துவமான பணி ஈந்தவர். தாய்மொழியின் தரம் பேணுவதில் தன் தகைமையை நிரூபித்தமைக்கு ஆய்வு அபிவிருத்தி கிளையின் வெளியீடுகள் என்றும் சான்றுதரும்.

"பணியுமாம் என்றும் பெருமை" என்பதைக் கடமை நேரத்தில் அவரில் கண்டு கொண்டேன். இவரின் தமிழ் அறிவின் ஆழமும் அதனைக் கற்பிக்கும் அழகான நுட்பங்களும் நிறைந்த விளைச்சலைத் தந்துள்ளன என்பதற்கு ஆய்வு அபிவிருத்திக் கிளையின் மதிப்பீட்டறிக்கைகள் ஆதாரங்களாகக் காணப்படுகின்றன.

வகுப்பறை, பாடசாலை மட்டத்தில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் தாய்மொழிப் பாடத்தின் அடைவை அதிகரிப்பதில் வெளிப்பட்ட அர்ப்பணிப்பு இவரை தக்காராய். தக்கோவில் உறுதி மிக்கவராய் வெளிக்காட்டியது. ஓர் அரச ஊழியராக தொழில் நிலையில் ஓய்வு பெறினும் அன்னை தமிழ்மொழியின் தகுதிவாய்ந்த ஒரு மகனாக "எம்மொழியாம் செம்மொழியை" அடுத்த தலை முறைக்கு பக்குவமாக, அழுத்தமாகக் கையளிக்கும் கற்பித்தல் பணிக்காக காத்திருக்கும் மாணவர் கள் ஊடாக பிறந்த பயன் எய்ய இறையாசியுடன் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**திருமதி எம். ஜீவராணி புனிதா**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம்.**

## வாழ்த்துச் செய்தி



யா/இடைக்காடு மகா வித்தியாலயத்தில் பகுதித் தலைவராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.மயிலு இரங்கநாதன் அவர்களது பணியினைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

சிறந்த தமிழாசிரியரான இவர் தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளிலும் மாணவர்கள் சாதனைகளை நிகழ்த்துவதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். அத்துடன் பரீட்சைத் திணைக்கள மதிப்பீட்டு நூலாக்கக் குழுவிலும் வளவாளராகச் செயற்பட்டுள்ளார்.

நல்ல குரல்வளம் கொண்ட சிறந்த அறிவிப்பாளரான இவர் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு மற்றும் தமிழ்த்தினம் சார்ந்த போட்டிகளில் அறிவிப்பாளராகக் கடமையாற்றி மாகாணக் கல்வித் திணைக்களத் தினது செயற்பாடுகளிற்கு உதவிகளைப் புரிந்த ஒருவராவார். 33 வருட அரச சேவை யின் பின்பு ஓய்வுபெறும் இவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதோடு மாண வர்களுக்கான இவரது கல்விப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு. செ.உதயகுமார்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்.**

## பல்தேர்ச்சி ஆளுமையாளர்



தாரமும் குருவும் தலைவிதி என்பார்கள். எமது பாடசாலைக்கு கிடைத்த அரிய பொக்கிசம் ஆசிரியராவார். பாடசாலையின் தமிழ் மொழி இலக்கிய இலக்கணப் பாடத்தை மாணவர்களுக்கு இலகுவாகக் கற்பித்து கல்வி அடைவை உச்சத்திற்கு கொண்டு சென்ற இவர் வெறும் கற்பித்தலோடு அல்லாமல் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் அறிவை எம் மாணவர்களிடம் வளர்த்து மேற்குறித்து மாணவர்களிடம் இலைமறை காய்களாக இருந்த மேற்படி ஆற்றல்களை வெளிக கொணர்ந்து பாடசாலையயில் முத்தமிழ் விழா என்ற பெருவிழாவை வருடா வருடம் நடத்துவதில் முன்னின்று உழைத்தவர். இவரது இப்பணிக்கு செல்வி த.தீபிகா 2013 இல் தேசிய மட்டத் தமிழ் மொழித்திறன் போட்டியில் பெற்ற 1 ஆம் இடம் சான்றாகும். இன்று ஓய்வு பெறும் இவ் ஆசிரியருக்கு எனது சார்பிலும் யா/இடைக்காடு மகா வித்தியாலய பழைய மாணவர்கள் சார்பிலும் பெற்றோர்கள் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.த.கிருபாகரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**தென்மராட்சி கல்வி வலயம்.**

## மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்



சிறந்த தமிழாசிரியர் திரு. மயிலு இரங்கநாதன் அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு மனம் மகிழ்கின்றேன். 33 ஆண்டுக ளாக ஆசிரியர் பணியாற்றி இப்பேறு பெறும் நல்லாசிரியருக்கு எனது பாராட்டுக்கள். 17.08.1988 இல் யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நியமனக் கடமையைப் பொறுப்பேற்று தற்போது யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் வரை சிறந்த ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். நிறைந்த மொழியாற்றலும் தமிழ்மீது அவர்கொண்ட பற்றும் இவரை மிளிரவைத்தன. இவர் எமது கல்வி வலயம் சார்ந்த பாடசாலைகளின் பல நிகழ்வுகளில் தனது காந்தக் குரல்கொண்டு சிறப்பான அறிவிப்பாளராகத் திகழ்ந்திருக்கின்றார். பல்துறை திறமை கொண்ட இவர் பல நாடகங்களை எழுதியும் நெறிப்படுத்தியும் கவியரங்குகளை நெறிப்படுத்தியும் பங்குகொண்டும் தனது தனித்துவ திறன்களை வெளிப்படுத்தி நின்றவர்.

இத்தகைய சிறப்புக்களைத் தாங்கி நிற்கும் ஆசிரியர் அவர்களது ஓய்வுக்காலம் சிறந்து வளர இறைவனை வேண்டி மீண்டும் மீண்டும் அவரைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

**திரு. தங்கவேலு பாலராஜ்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்.**

## ஆசிரிய சுடர் பிரகாசிக்கட்டும்!



திரு. மயிலு இரங்கநாதன் அவர்கள் சேவைக்காலத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பணியாற்றியபோது தமிழ்ப் பாடத்தில் அவரது புலமை, கற்பித்தல் நுட்பங்கள், வகுப்பறை நிர்வாகம், குரல்வளம், ஆளுமைத்திறன், கற்பித்தல் ஊடாக மாணவரைக் கவரும் பாங்கு என்பனவற்றை நேரில் கண்டிருக்கின்றேன்.

வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு அப்பால் மாணவர்களின் ஆளுமை விருத்திக்காக கவிதை, கட்டுரை, நாடகம் ஆகிய துறைகளிலும் அவர்களை நெறிப்படுத்தி வெற்றி கண்ட சாதனையாளர்.

ஆசிரியர் சுடர் ரங்கநாதன் அவர்கள் மனைவி, பிள்ளைகளுடன் இப்பாரினில் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்வி மற்றும் சமூகப் பணிகளை ஆற்ற இன்றைய மணிவிழா நாளில் மனமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

**திரு.இராமநாதன் குணநாதன்,**
**முன்னாள் அதிபர், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, ஓய்வு நிலை**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், நீர்வேலி.**

## கடமையை கண்ணாய் போற்றும் நல்லாசான்



நான் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில் கைதடி குருசாமி வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. இரங்கநாதனை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கம்பீரமான தோற்றம், மகிழ்ச்சியின் ரேகை பதிந்த முகம் இதுதான் அவரைப் பற்றிய எனது முதற் பதிவு.

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் தமிழ் கற்பிக்க பொருத் தமான ஆசிரியர் இல்லாத சமயம் இவரைத் தேடிப்பிடித்து எனது பாடசாலைக்குக் கொண்டு வந்தோம். அவரது கற்பித்தலில் தமிழ் மணத்தது. நாவில் தமிழ் விளை யாடியது. அவரது தமிழ் , மாணவர்ளுக்கு மகுடியாகவே இருந்தது. அனைத்து மாணவர்களும் அவரது கற்பித்தலில் மகிழ்ந்து போனார்கள்.

நல்லதோர் மணிக்குரல் அறிவிப்பாளர், கவிதை நடையில் அவரது அறிவித்தலின் தமிழ் களி நடம் புரியும். பொதுச் சேவையில் ஈடுபட்டாலும் தான் கற்பிக்கும் மாணவர் சார்பாக எந்தக் குறையும் வராது கடமையுணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் கடமையாற்றிய நல்லாசான். அகவை அறுபதில் ஓய்வு பெறும் அவரது எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**திரு.வே. பாலசுப்பிரமணியம்**
**ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்.**

## நல்லாசிரியர்



நல்லாசிரியருக்கு முன்னுதாரணமாகத் திகழும் ஆசிரியர் திலகம் தன்னுடைய நடை, உடை, பாவனை செயற்பாடுகள், கவர்ச்சிகரமான அறிவார்ந்த கற்பித்தல் மூலம் மாணவர்களை தன்பால் ஈர்த்து தன்னைப் போன்ற நற்பிரஜைகளை உருவாக்குபவர். அவர் கற்பித்த பாடசாலைகளில் இதுவரை அவர் சார்பாக ஒரு சிறு பிரச்சினை கூட எழுந்ததில்லை. தமிழ்ப் பாரம்பரியம், கலை விழுமியங்கள் போன்றவற்றுடன் இந்து மதத்தையும் இணைத்து மாணவர்களை அதன்பால் ஒழுகச் செய்பவர். தனது சொந்தப் பிள்ளைகளை தாம் கற்பிக்கும் பாடசாலையிலேயே கற்பிக்க வேண்டும் என்ற எண்ண முடையவர். தான் கற்பிக்கும் பாடசாலையை கோயிலாகக் கருதுபவர்.

நல்லாசிரியராக இருந்து மாணவர்களை அறிவார்ந்த நற்பிரஜைகளாக உரு வாக்கிய திரு.ம.இரங்கநாதன் ஆசிரியர் அவர்கள் ஓய்வுபெறுவது கோப்பாய் கல்விக் கோட்டத்தின் தமிழ்க் கல்விக்குப் பேரிழப்பாகும். எனினும் அவர் சகல நலன்களும் பெற்று தனது குடும்பத்தாரோடு நீடூழி காலம் நோய் நொடிகளின்றி பல்லாண்டு காலம் வாழ எல்லாம்வல்ல இறைவனை இம்மணிவிழா நாளில் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. நா.சிவநேசன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக் கல்வி அலுவலகம், கோப்பாய்.**

## மாணவர்களின் மனதில் என்றும் நிலைத்திருப்பவர்



வகுப்பறைக் கற்பித்தலில் தனித் திறனுடையவராக செயற்பட்டு மாணவர்களின் வாழ்க்கையில் கல்வியை முகிழச் செய்தவர். தனது வகுப்பறைக்குள் நுழைந்ததிலிருந்து வெளியேறும் வரை சலிப்பில் லாத சோர்வை ஏற்படுத்தாத கற்பித்தல் பாணியை கைக்கொண்டு அர்ப்பணிப்போடு சேவை புரிந்து செயலூக்கத்தினை வளர்த்தெடுத்த சிறந்த மொழியாசிரியர் திரு. மயிலு இரங்கநாதன் ஆவார்.

வகுப்பறைக்குள் நுழைந்தவர்கள் எல்லாம் நல்ல ஆசிரியர்களாக மிளிர முடியாது. மாணவர்களின் இதயங்களில் நுழைந்து அவர்களை நன்மை தரும் சமூக மாற்றத்துக்குள் உந்தி தள்ளுகின்ற உயரிய பணியை ஆற்றுகின்றவரே நல்லாசானாக கருத முடியும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதற்கொப்ப செயலாற்றியவர் திரு.மயிலு இரங்கநாதன் அவர்கள்.

அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டிகளில் இவரின் பங்கு அளப்பரியது. தேசிய, மாகாண, வலய, கோட்ட, பாடசாலை மட்டங்களில் நிறைந்த வெற்றிகளைப் பெற அரும்பாடுபட்டவர். 2014 ஆம் ஆண்டு கோப்பாய் கோட்டத்தில் முதன் முறையாக தங்கப்பதக்கம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள போராடிய செயல் வீரன்.

எதிர்காலக் கல்வியுலகம் இவரது சேவையை அன்புடன் அரவணைக்கும்.

மணிவிழா நாயகன் என்றும் சிறப்புடன் வாழ எம்பெருமான் அருளாசி நல்கட்டும். வாழ்க நலமுடன், வாழ்க வளமுடன்.

"ஊமைகளை உரக்கப் பேசச் செய்கின்ற மொழி கல்வி"

**திரு.சி.பூபாலசிங்கம்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்), யாழ். கல்வி வலயம்.**

## மனிதம்



தனது ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு.மயிலு இரங்கநாதன் அவர்கள் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறைப் பட்டதாரிக்கு ரிய பட்டத்தையும் பெற்றுள்ளார். தான் வகித்த ஆசிரியர் பதவியில் படிப்படியாக முன்னேறிய இவர் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் மதிப்பீட்டு நூலாக்கக்குழு வளவாளர் என்னும் உயர்பதவியை வகித்துள்ளமை இவரது கல்வித்துறை சார்ந்த வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளமையை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

சகல மனிதர்களும் தங்களின் தாய்மொழியிலேயே சிந்திக்கின்றனர். திரு.மயிலு இரங்கநாதன் அவர்கள் தமிழ்மொழியைத் தன் கற்பித்தலுக்குரிய பாடமாகக் கொண்டிருந்ததால் அவருடைய கற்பித்தல் நடைமுறைகளில் கவர்ச்சியும் அதே வேளை அர்த்த புஸ்டியுள்ள வனாகவும் அமைவதை நான் அவதானித்திருக்கின்றேன்.

தெளிவான சமூகப்பார்வையும் நிதானமான திட்டமிடல் திறனும் சிறந்த மொழிப் புல மையும் கொண்டவராக திரு.மயிலு இரங்கநாதன் அவர்கள் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தனது சமூகப்பணிகளைத் தொடர்வார் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

வாழ்க பல்லாண்டு வளர்க அவரது சமூகத்தொண்டுகள்!!!

**திரு.கே.ஆர்.டேவிட் (ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்,**
**ஈழத்து சிறுகதை எழுத்தாளர்)**



**திரு. மயிலு இ**
**(B.A,PGDE,Spe**

**கல்விச்**

யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல
- 20.01.1992
யா/நீர்வேலி றோ.க
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வி
யா/ஆவரங்கால் மகாஜன வித்
யா/கைதடி குருசாமி வித்தி.-
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க
யா/அத்தியார் இந்துக் கல்லூரி
யா/இடைக்காடு மகா வித்தி-

**சமூக**

அச்சுவேலி தெற்கு நவோதய ச.
செயலாளர், ஆவரங்கால் இ
ஆவரங்கால் மேற்கு வி
முகாமைத்துவக்கு
தமிழ்மொழி மூல ஆலோசகர்-
பகுதித் தலைவ
யா/ இடைக்காடு மகாவித்

**கற்ற கல்விக்**

வகுப்பு 1- O/L வரை - யா/
A/L - யா/ நெல்லிய
B. A.- பேராதனை
Spe,Trd - பலாலி ஆசிரி
PGDE- தேசிய கல்வி

**மணிவிழா மலரிதழ்**
**அனுசரணையாளர், ஊ**
**நெதர்லாந்து, லண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ள் கல்விச் சேவையாற்றி 16.05.2021 அன்று சேவையை
# றை நயப்புக் காணும் எங்கள் அன்புக்கினிய தமிழாசான்
# களை- மணிவிழா நாயகனை வாழ்த்தி மகிழ்கின்றோம்



## இரங்கநாதன்
## e.Trd,-SLTS-1)

**ச்சேவை**

ரா வித்தி- 21.10.1988-19.01.1992
கலாசாலை (பயிற்சிக் காலம்)
2-31.12.1993
.க.த.க. பாடசாலை,
வித்தி.- 01.01.1994-22.01.1995
த்தி- 23.01.1995-31.08.1995
.- 01.09.1995-11.02.2002
க வித்தி.- 12.02.2002-06.06.2010
ரி-07.06.2010-10.06.2012
தி- 11.06.2012-13.05,2021

**சேவை**

ச.ச. நிலைய கணக்காய்வாளர்
இந்துவின் தமிழ் விருட்சம்
விவேகானந்த முன்பள்ளி
குழு உறுப்பினர்.
- லிற்றில் மாஸ்டர் மொன்டிசூரி.
வர்- தமிழாசான்
த்தியாலயம், அச்சுவேலி.

**க் கூடங்கள்**

/ ஆவரங்கால் மகாஜன வித்தி
யடி மத்திய கல்லூரி.
ன பல்கலைக்கழகம்.
ிரியர் பயிற்சிக் கலாசாலை
ி நிறுவகம் - மஹரகம.

**தொகுப்புக் குழுவினர்**
**ரெமு கிழக்கு, ஜேர்மனி,**
**ர் வாழ் உறவினர்கள்.**

### தமிழின் இலக்கணம் இரங்கா



தமிழிற்கே இலக்கணமாம் இரங்கநாதனின் அகவை அறுபது
அகவைதான் அறுபது இரங்காவின் சேவைகளோ அளப்பரியது
பண்பும் அறிவும் மிக்க தமிழாசானே! இன்றைய நாயகனே!
இன்றல்ல என்றும் நாயகன்தான் இத்தரணியிலே நீடூழி வாழியவே

விழாக்கள் என வந்தால் ஓங்கி நிற்கும் நின்கைவரிசை
மாணாக்கரோடு நீரும் மாணாக்கனாய் நின்றிடுவீர்
கண்ணிமைக்கும் பொழுதினிலே கையில் வைப்பீர் வாழ்த்துப்பாக்கள்
கவிதை, பாடல், கதைகளை நயம்பட நவின்றிடுவீர்.
இ.ம.வியை இமயந்தொட வைத்த இளவரசே!
இன்று முதல் நும் சேவைக்கு விடுமுறை பாடசாலையில்
விடுமுறை உமக்கல்ல தொடரட்டும் நும் சேவை
உயிர் மூச்சுள்ளவரை தமிழ் மூச்சாய்
என்றும் நலமுடன் வாழிய வாழியவே குடும்பத்துடன்

**திரு.நா.சுவாமிநாதன்,**
**ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**(ஆரம்பக் கல்வி) இடைக்காடு அச்சுவேலி.**

### சாதனையாளனுக்கு வாழ்த்து



யாழ். கல்வி வலயத்தில் தமிழ்த் துறைக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளராக நான் சேவையாற்றிய போது மிகத் திற மையான தமிழ் ஆசிரியராகவும் சாதனை படைத்தவராகவும் யாழ்ப் பாணக் கல்வி வலயத்தில் தமிழ்ப் பாடத்தில் மிகச் சிறந்த பெறு பேறுகளை பெற்றுத் தந்தவராகவும் தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய மட்டம் வரை மாணவரை அனுப்பிய பெருமைக்குரியவராகவும் திரு. இரங்கநாதன் காணப்பட்டார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடமையாற்றும் போது அக்காலப்பகுதியில் அந்தப் பாடசாலையில் முதலாவது முறையாக குறியீட்டு நாடகம் ஒன்றினை அரங்கேற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

முதன்முதலாக அந்தப் பாடசாலையில் முத்தமிழ் மன்றம் ஒன்றை உருவாக்கி கலைத்துறையில் மாணவர்களை வளர்த்தவர். அடுத்து இடைக்காடு மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில் இலக்கியத் திறனாய்வுப் போட்டியிலே தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெறச் செய்து கோப்பாய் கோட்டத்திற்குப் பெருமை சேர்த்தவர். இவர் தமிழ்த் தினப் போட்டிகளில் மாணவர்களைத் தயார்படுத்தியதும் நடுவர் பணியில் சிறப்பாக செயலாற்றியதும் எமது வலயத்தின் சிறந்த அறிவிப்பாளரா கச் செயற்பட்டமையும் இவரது தமிழ்ப் புலமையை வெளிக்காட்டி நிற்கின்றது. இவரது சேவைக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் தமிழ்த் துறையில் உயர்வு பெற்று பிரகாசம் அடைந்தது என்பது மறக்கமுடியாத உண்மையாகும். இவருடைய ஓய்வுக்காலம் மென்மேலும் சிறப்புப் பெற வாழ்த்துகின்றேன்.

**திருமதி மீரா அருள்நேசன்,**
**ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)**

### ஆசிரியரில் ஓர் கலங்கரை விளக்கு



இயல், இசை, நாடகம் என்ற தமிழ் மொழியியல் பண்பாட்டை வாழை மரத்தில் ஊசி போல் மாணவர்களிடத்து ஏற்றி பல விழாக்களை நடத்தி முத்தமிழ் கொட்டச் செய்தவர் எம் ஆசிரியர். 2013 ஆம் ஆண்டில் பாடசாலை வரலாற்றில் என்றும் காணா மாபெரும் முத்தமிழ் விழாவை சிறப்புற என்னுடன் திட்டமிட்டு நடாத்தி "வித்தியாலயம்" என்ற முத்தமிழ் நூலை சிறிய காலத்தில் இவரும் இவருடன் சேர்ந்து பணியாற்றிய மலர்க்குழுவும் வெளியிட்டது பாடசாலையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டது எனலாம். ஆசிரிய மணி தமிழ் ஆசான் இரங்கநாதன் இளைப்பாறுவது உண்மையில் பாடசாலைக்கும் தமிழ் மாணவர்களுக்கும் பேரிழப்பு என்றாலும் அவர் செய்த மேற்படி பணிகளை பாராட்டி மணிவிழாக்காணும் அவரை எனது குடும்பத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்தி நீண்டு ஆயுளும் நிறைவான உடல் ஆரோக்கியம் கொண்டு வாழ்ந்து தமிழ் மாணவர்களுக்கு இவர் தம் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல இறை அருள் இவருக்கு கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**திரு.அ.அருந்தவநேசன்(J.P)**
**முன்னாள் அதிபர், யா/இடைக்காடு மகா வித்தியாலயம்**
**செயலாளர், ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியம்**
**கோப்பாய் பிரதேச செயலகம்.**

### தமிழாசிரியருக்கு வழிகாட்டி



ஆசிரியருடைய செயற்றிறனை நிர்ணயிக்கும் காரணிகளில் அவரது தோற்றமும் முக்கியமானது. இது பற்றிய எண்ணம் மேலெழும் போதெல் லாம் என் கண் முன் நிற்பவர் ஆசிரியர் திரு. ம. இரங்கநாதன் அவர்கள் தான்.

காட்சிக்கு எளியராய், கணீர் என்ற குரலாய், தெள்ளு தமிழை அள்ளி வழங்கும் கவினுறு அறிவிப்பாளராய், அமுதமாய்த் தமிழ் நல்கும் அற்புத ஆசானாய் எம்மிடையே பவனி வரும் சிறப்பு அவருக்கு உண்டு.

செய்வன திருந்தச் செய்யும் வேட்கை திரு. இரங்கநாதன் ஆசிரியரிடம் உண்டு. 2007 ஆம் ஆண்டு நான் பாடசாலை ஒன்றின் அதிபராகத் தெரிவான காலப்பகுதியில் பரீட்சை மேற்பார்வைக் கடமைக்காகத் தெரிவானேன். எனது நிலை உணர்ந்து திரு. ம.இரங்கநாதன் அவர்களை என்னுடன் இணைத்திருந்தனர். அன்று எனக்கு அது பயில்களம். பரீட்சையை எப்படித் திட்டமிட்டுச் செவ்வனே நடத்துவது என்பதை அவரிடம் இருந்து நான் கற்றுக் கொண்டேன்.

அவரது தோற்றப்பொலிவு மற்றும் ஆடை அலங்காரங்களில் இருந்து ஓடும் மோட்டார் சைக்கிள்வரை யாவற்றிலும் ஓர் ஒழுங்கமைப்பு இருக்கும். மிஸ்டர் கிளீன் என்று செல்லமாக அழைக்கப்படும் அழகு நிலவும் அவரது இளமைக் கோலம் அகவை அறுபது என்பதையே எம்மிடம் ஏற்க மறுக்கும். அரச சேவைக்கு எல்லை வகுக்கப்பட்டிருப்பினும் ஆசிரியரின் கல்விச் சேவைக்கும் தமிழ்ச் சேவைக்கும் எல்லை ஏது. அவை இன்னும் தொடரக் காண்போம். இனிய மணிவிழா நாள் நல்வாழ்த்துக்கள்.

**செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை, தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.**

### அர்ப்பணிப்பு மிக்கவர்



கல்வி மனிதவள மேம்பாட்டிற்கும், மனித வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைகின்றது. கல்வியில் ஏற்படும் முன்னேற்ற மானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு நாட்டின் வளமான எதிர்காலம் அந்நாட்டின் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. அதனால் தான் ஒவ்வொரு ஆசிரியரும் எதிர்கால தலைவர்களை உருவாக்கும் சிற்பிகள் எனப்படுகின்றனர். அந்த வகையில் ஆசிரியப் பணியில் 32 வருடங்களும் 9 மாதங்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி, 15.05.2021 ஆம் திகதியுடன் தனது சேவையை நிறைவு செய்து இன்று மணிவிழாக் காணும் திரு.மயிலு இரங்கநாதன் அவர்கள் இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்குகின்றார்.

இடைநிலைப் பிரிவின் பகுதித் தலைவராக, பாடசாலைப் பரீட்சைகளின் பொறுப்பாளராக, தமிழ்மொழித் தினப் போட்டிகளின் இணைப்பாளராக, பாடசாலை மட்ட சகல நிகழ்வுகளினதும் ஒழுங்கமைப்பாளராக, சிறந்ததோர் தமிழ்ப்பாட ஆசிரியராக, கவிஞராக, அறிவிப்பாளராக என பல்வேறு பாத்திரங்களில் தனது அபார திறமைகளை வெளிக்காட்டிய மணிவிழா நாயகனின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைந்து அவர் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**[illegible]வாசன், அதிபர்,**
**இடைக்காடு மகா வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8951)

### சிறந்த புலமையாளன்



தாய்மொழியாம் தமிழ் மொழியை கற்பிப்பதில் பாண்டித்தியமும் தனித்துவமும் பெற்ற ஆசிரியர். திரு. இரங்கநாதன் அவர்கள். சாதாரண தர, உயர்தர மாணவர்கள் பலரை அதி விசேட சித்திகள் பெற வைத்து பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமை உடையவர். ஆவரங்கால், நீர்வேலி, இடைக்காடு என பல பாடசாலை மாணவர்களை கற்பித்து நல்வழிப்படுத்தி புகழ் படைத்தார்.

பல தேசியப் பரீட்சைகளின் மேற்பார்வையாளராக இருந்து பரீட்சைகளை சிறப்புற நடாத்திய தகைமையாளன். ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர், ஆசிரியர்கள் கவிதையால் வாழ்த்தும் கவியாக்க சிறப்புக் கொண்டவர். இவ்வாறாக கல்விப்புலத்தில் அளப்பரிய சேவையாற்றி மணிவிழாக்கண்டு ஓய்வுபெறும் இரங்கநாதன் ஆசிரியர் குடும்பத்தினருடன் இனிதே சுகமாய் வாழ வாழ்த்துவதோடு தொடர்ந்தும் கல்விச் சேவையாற்ற இறைவன் வழிவகுப்பாராக என வேண்டுகிறேன்.

**திரு.அ.அருணந்திசிவம், அதிபர்,**
**யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி.**

### ஆசிரியர் திரு.ம. இரங்கநாதன்



ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது அயராத முயற்சியினால் சிறந்த ஒரு ஆசிரியராக மிளிர்ந்தார். மாணவர்கள் தமிழ்மொழியை விருப்புடன் கற்கும் வகையில் கற்பித்த ஆசிரியர். சிறந்ததொரு கவிஞராகவும் தனக்கென தனித்துவமான ஒரு பணியைக் கொண்ட அறிவிப்பாளராகவும் திகழ்ந்தார். கோப்பாய் கோட்டத்தில் இவர் அறிவிப்பாளராகக் கடமையாற்றாத பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் இல்லை என்றே கூறலாம். அத்துடன் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்து வருகிறார்.

இவருடைய ஓய்வுக் காலம் நீண்ட புகழ், வாழ்நாள் ஆரோக்கியம் என்பவற்றுடன் திகழ சோமாஸ்கந்தப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

**சி.திரிகரன், முதல்வர்,**
**யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி.**

### அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்



சகலதுறை வல்லுநரான இரங்கநாதன் ஆசிரியர் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ம்ட்டுமன்றி இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வந்தார். மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியில் அவர் காட்டிய கரிசனையால் மாணவர்கள் அவர் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டு செயற்பட்டனர். விளையாட்டுப் போட்டி மற்றும் இயல், இசை, நாடக மன்றச் செயற்பாடுகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி அந்நிகழ்வுகள் சிறப்புற அமைய தனது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி வந்தவர் என்றால் அது மிகையல்ல. இரங்கநாதன் ஆசிரியர் ஒரு சிறந்த அறிவிப்பாளர் ஆவார். அவரின் குரல் பாடசாலை நிகழ்வுகளில் ஓங்கி ஒலிக்கும்.

இன்று எமது பாடசாலையில் கல்வித்தெய்வமாகிய கலைகளுக்கு ஒரு உருவச் சிலை தலைநிமிர்ந்து நிற்கின்றதென்றால் அதற்கு ஆணிவேராகச் செயற்பட்டவர் இரங்கநாதன் ஆசிரியரே ஆவார்.

இரங்கநாதன் ஆசிரியரின் ஓய்வுக்காலம் வளம்மிக்கதாக அமையவும் அவரின் நீண்ட ஆயுளுக்காகவும் பிரார்த்தித்து அவர் இன்னும் பல சமூகப் பணிகளை ஆற்ற இறைவன் அவருக்கு துணை நிற்க வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**ந.ஜெயரூபன், அதிபர்,**
**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்.**

### பெருமை பெறும் வாழ்த்துக்களின் சொந்தக்காரன்



16.05.21ல் மணி விழாக்கண்ட மாண்புமிகு திரு ம. இரங்கநாதன் ஆசிரியர் ஐயா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு, அவர் பணிபுரிந்த பாடசாலைகள் இன்றும் அவர் மாணவர்களுக்கு ஆற்றிய கல்வி சார்ந்த சேவைகளும், சக ஆசிரிய-ஆசிரியைகளோடு சேர்ந்து ஆற்றிய பணிகளும் இரங்கநாதன் ஆசிரியர் சார்ந்த அனைத்து நெஞ்சங்களிலும் நிறைந்தே இருக்கும், இசைத்துறையிலோ, நாடகத்துறையிலோ மற்றும் இன்னோரன்ன கலை சார்ந்த துறைகளிலும் புகழ் பெற்ற எங்கள் ஆசான் திரு.இரங்கநாதன் ஆசிரியர் அவர்களை தொடர்ந்தும் தன்னாலான பணிகளை பாடசாலைக்கு வெளியே இருந்தும் தன்னாலான சேவையினைத் தொடரவும், அவரின் குடும்ப வாழ்வு வளம் பெறவும், பல்லாண்டு காலம் வாழ வேண்டியும், அகமகிழ்ந்து உளமார வாழ்த்தி அமர்கிறேன்.

**என்றும் அவரின் உடன் பிரியா**
**மு.கந்தையா**

### தன்னை எனக்குள் வைத்த என் ஆசான்



நிமிர்ந்த நடை நேர் கொண்ட பார்வை, கணீர் என்ற குரல், புன் சிரிப்பு என உலகை ஆள உருவாக்கும் பள்ளியில் சொல்லாலும் எழுத்தாலும் என்றும் நம்முன் நிற்கும் ஆச்சரியமும் அதிசயம் தான் இவ் ஆசிரியர்.இன்று நானும் ஓர் ஆசிரியர் என பெருமிதம் அடையும் வகையில் என்னை வளர்த்தெடுத்து அவரோடு சேர்ந்து ஒரே பாடசாலை பணியாற்றக் கிடைத்த பேறு எல்லோருக்கும் அமைவதில்லை.

சமூகத்திற்கு ஆற்றும் பணிகளில் எல்லாமே தளங்களில் உயர்வானவை தான். அவைகளுள் ஆசிரியப் பணி தனி சிறப்புடையது.நேரடியாக உருவாக்கல் பணியுடன் தொடர்புடையது. இத்தகைய பணியில் சிறந்து விளங்கி உயர்தரத்தின் பகுதித் தலைவராக இருந்து மாணவனின் கனவுகளைக் கைவசப்படுத்தி கொடுக்க உதவும் ஓர் தூண்டுகோலாக விளங்கியவர்.

இன்று ஆசிரியர் பணியை நிறைவு செய்து தனது 60 ஆவது (அகவை) மணிவிழாக் காணும் அவர் மேலும் செழிப்புற நோயற்ற வாழ்வும் நிறைவான செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திரு.ஆ.கமலகுமரன்,**
**செயலாளர், பணியாளர் நலன்புரிச் சங்கம்,**
**யா/ இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி**

## கடந்த 17.08.1988-13.05.2021 வரையான 33 வருடங்கள் கல்விச் சேவையாற்றி 16.05.2021 அன்று சேவையை நிறைவு செய்து 08.12.2021 இன்று புதன்கிழமை பணிநிறை நயப்புக் காணும் எங்கள் அன்புக்கினிய தமிழாசான் பகுதித் தலைவர் திரு.மயிலு இரங்கநாதன் அவர்களை- மணிவிழா நாயகனை வாழ்த்தி மகிழ்கின்றோம்



### மணிக்குரலோனுக்கு வாழ்த்துக்கள்



தமிழின் பெரும் வித்தகரான எமது மணிவிழா நாயகனின் பெரும்பணி தொடர்வதோடு புதுவையின் புகழ் பவிட எமது Little Masters Montesoori முன்பள்ளியின் மொழி ஆலோசகராக திகழ்வதோடு எமது முன்பள்ளியின் பாட்சாலைக் கீதத்தினை பெருமை சேர்த்து ஆயுள்காலம் வரை பொருந்தும். அளவிற்கு வசனங்களை வடிவமைத்து எந் நிகழ்வுகளிலும் தனது காந்தக்குரலால் அடுக்குமொழி வார்த்தைகள் பேசி அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் எமது அழியாச் சொத்தாகிய கல்வித் திருவிளக்குக்கு ஒளி கொடுத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மணிவிழா நாயகனை புத்தூரின் புகழ் சேர்ந்திட பூச்சொரிந்து அகம் மகிழ வாழ்த்துகின்றோம். ஓய்வுக் காலத்திலும் மகிழ்ச் சிக்குரிய இயலுமைகளுடன் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளு டனும் அனைத்து செல்வங்களாலும் திருப்தியை பெற்று வாழ்வாங்கு வாழ்த்துவதோடு அவருடைய இத்தனை நாள் சேவையை மனதார பாராட்டுகின்றேன்.

**திரு.கி.சதீஸ்குமார் JP, இயக்குநர்,**
**லிற்றில் மாஸ்டர் மொண்டிசூரி**
**(புத்தூர், யாழ்ப்பாணம், இணுவில், மல்லாகம், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய்)**

### மணிவிழா வாழ்த்துக்கள்



ஈழத்தின் வடபுலத்தில் வேளாண்மை தழைத்தோங்க
கோமாதா குடிகொண்ட ஆவரங்கால் என்னும் நன்னூரில்
அவதரித்த அருஞ்செல்வம்- எம் ரங்கநாதன் ஐயா
நாம் நேசிக்கும் தமிழில் ஆளுமையே- நமை
நேசிக்கும் தலைசிறந்த ஆசானே!
அனுபவத்தால். அறிவால் உயர்ந்து நிற்பவரே!
சிந்தனை சொல் செயலால் சிறந்து விளங்குபவரே!
இன்முகம் என்றும் கொண்டவரே!
இணையிலா புலமை மிக்கவரே!
ஒழுக்கத்தில் கடமை பேணி வழுவில்லாப் பண்பாளனாகி
அர்ப்பணிப்புடன் அறப்பணி செய்து
பார்போற்றும் நாயகனாய் பவனி வரும்- உங்களை
பணிவுடன் வாழ்த்துகின்றோம்
மணிவிழா நாயகனாய் மணிமகுடம் சூட்டி நிற்கும்
சபையின் தலைவன் ராங்கநாதன் ஆசிரியர் அவர்கள்
மனைவி மக்களுடன் பல் வளமும் பெற்று
பல்லாண்டு வாழ்க வாழ்கவென
நல்வாழ்த்து நாம் நவின்று நன்றியுடன் துதிக்கின்றோம்

**திரு.இ.மன்மதராஜன்,**
**செயலாளர், வளர்பிறை ச.ச. நிலையம், ஊரெழு.**

### தமிழாய் வாழும் சிம்மக்குரலோன்



அச்சுவேலி. நெல்லியோடை மண்ணின் தவப் புதல்வன் திரு.ம.இரங்கநாதன் ஆசிரியர் தனது அகவை அறுபதில் கால்தடம் பதித்து தனது ஒப்பற்ற பணியில் நிறைவாகி மணிவிழாக் காண்கிறார். அவருக்கு முதற்கண் எமது மனம் நிறைந்த அன்பு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும். அன்புடனே அனைவரையும் அரவணைத்து. பண்புடனே ஆசிரியப் பணி நின்று பார் புகழப் பலருக்கு நற்கல்வியூட்டி. தமிழின்பால் தீராத அன்பு கொண்டு பாக்கள் பல புனைந்து மேலும் இந்துவின் தமிழ் விருட்சத்தின் செயலராகி இலச்சினைக்கு உயிர் ஊட்டி மக்களின் பெரும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர் மணிவிழா நாயகன் இரங்கநாதன் ஆசிரியர். செவ்வனே செய்து நற்கீர்த்தி பெற்றுமே சேவையால் உயர்ந்திட்டவர். தமிழ்ச் சமுதாயத்தைத் தொண்டில் சாரதியாக நின்று இன்னும் பல்லாண்டு காலம் குடும்பத்தாருடன் மகிழ்வோடு வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு. செ.தவராஜசிங்கம்**
**சமாதான நீதிவான், தலைவர்**
**இந்துவின் தமிழ் விருட்சம், புத்தூர்.**

(8951)

### வழிப்படுத்தும் வல்லமையாளன்



16.05.2021 இன்று அகவை 60 பெற்று தன் ஆசிரியப் பணியிலிருந்து நிறைவு பெற்று மணிவிழாக் காணும் எமது நவோதய சனசமூக நிலையத்தினுடைய அச்சாணியாக விளங்கும் தமிழாசான் திரு.மயிலு இரங்கநாதன் அவர்களை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தால் பேருவகை பெறுகின்றது நவோதய சனசமூகம்.

மணிவிழா நாயகன் எமது நிலையத்தின் சேவகனாக தனது பதினைந்தாவது வயது முதல்கால் பதித்தவர். இன்று இருப்பவர்களில் நிலையத்தின் வளர்ச்சியில் அச்சாணியானவரில் ஒருவர். நிலையம் சார்ந்த மாணவர்களது கல்வித் தகைமைகளைக்கண்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக விழாக்களை முன்னெடுக்க வைத்த பெருமைக்குரியவர்.

இவ்வாறெல்லாம் வழிப்படுத்தலில் வல்லமையாளனாகத் திகழும் எங்கள் ஆசான்-மணி விழா நாயகன் தனது குடும்ப சகிதம் ஓய்வுக்காலத்தில் சிறப்புற வாழ்ந்திட நிலையஞ் சார்பாக இறைவனை வேண்டுகின்றோம்.

**திருமதி. சித்திரா பத்மநாதன், செயலாளர்,**
**அச்சுவேலி நவோதய ச.ச.நிலையம்.**

### நல்லாசிரியனுக்கு நான்



அகிலமே கொண்டாடுவதாய் உணர்கிறேன். என் ஆசானின் பிறந்த தினத்தை., வாழ்த்த வயதில்லை உன்னை. ஆதலால் வணங்கி மகிழ்கின்றேன். நீ ஆசான் மட்டுமல்ல எனக்கு- என். ஆவியின் அங்கமும் என்பேன். கண்ணயர்ந்த ஓர் நிமிடம்.... உன் வாய் கொண்ட மை வாய்மை. உன் தமிழ் கொண்ட மை பெருமை , உன் வேலை கொண்ட மை நேர்மை. உன் கைக்கு பூசிய மை தூய்மை. உன் மெய்யிற்கு பூசிய மை உண்மை. வாழ்த்த வயதில்லை உன்னை. ஆதலால் வணங்கி மகிழ்கின்றேன் இரங்கநாதா

**பா.அங்குசன், குறும்பட இசை, இறுவெட்டு ஆக்கக் கலைஞன், ஆசிரியரின் மாணவன்**

### தேசிய மட்டச்சாதனைக்கு காரணகர்த்தா



யா/இடைக்காடு மகா வித்தியாலயத்தின் புகழ் பூத்த ஆசிரியர்களின் வரிசையில் மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு.மயிலு இரங்கநாதன் அவர்கள் தனது உயர் சேவையை நிறைவு செய்து மணிவிழாக்காணும் இவ்வேளையில் மாணவர்களாகிய எமக்காற்றிய சேவைதனை நினைவு கூர்ந்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார்
கண் துஞ்சார் கருமமே கண்ணாயினார்" என்பது சான்றோர் வாக்கு.

இவ்வாக்கின் மொத்தவடிவம் எமது ஆசான் என்றால் அது மிகையாகா. வெறுங்கல்லைக் காணும் சிற்பி கல்லைச் செதுக்கிச் சிலையாக்குவது போல எனது ஆசானும் எனது அறிவைச் செதுக்கி தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டச் செய்த பெருமைக்குரியவர். "எங்கே நடப்படுகிறாயோ அங்கே மரமாகு" என்ற ஆசிரிய தத்துவத்தின் தார்மீகப் பொறுப்பறிந்து சேவையாற்றிய எமது ஆசானின் ஓய்வுக்காலம் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**பணிவுள்ள மாணவி த.தீபிகா**
**(கைத்தொழில் தகவல் தொழிநுட்பம், இறுதி வருட மாணவி ,ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்)**

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த பேருந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயம்

(திருமலை)

திருகோணமலை-கண்டி பிரதான வீதி.மங்குபிரிஜ் பகுதியில் ஆடைத் தொழிற்சாலைக்கு சொந்தமான தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில் காயமடைந்தவர்கள் திருகோண மலை பொது வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். குறித்த விபத்து நேற்றுக் காலை இடம் பெற்றது. விபத்து தொடர்பில் உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (நி)



மணிவிழா வாழ்த்துகள்



திரு.மயிலு இரங்கநாதன்
(SLTS-I)
21.10.1988–18.01.1992
வரையான காலப் பகுதியில்
யா/வாதரவத்தை
விக்னேஸ்வர வித்தியாலயத்தில்
கல்வி கற்பித்து
எமது உயர்வுக்கு
காரணமான ஆசானை
மணிவிழா நாளில்
வாழ்த்தி
வணங்குகிறோம்.
(சீ-3190)

வாழ்த்துவோர்:
1991 க.பொ.த.சாதாரண பிரிவு மாணவர்கள்.
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்.

# கறுப்பு அன்னங்கள் மக்கள் பார்வைக்கு



(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் 86 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக ஐந்து கறுப்பு அன்னப் பறவைகள் தற்போது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் 22 ஆம் திகதி பிறந்த இந்த அன்னப் பறவைகள், கொரோனாத் தொற்று காரணமாக பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட வில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு உரித்தான இந்த ஐந்து கறுப்பு அன்னப் பறவைகள் தற்போது தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் வசித்து வருகின்றன. புதிதாகப் பிறந்த அன்னப் பறவைகளில் மூன்று ஆண் பறவைகளும் இரண்டு [illegible] [illegible] விக்கப்பட்டுள்ளது. (நி)

# எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

[illegible] சபுக [illegible] எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. களஞ்சியப்படுத்தப்பட்ட மசகு எண்ணெய் நிறைவடைந்ததால் கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காவலரண்கள் அமைத்து மணல் அகழ்வைத் தடுக்கவும்

## மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலவன்பொக்கணை கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறும் மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அபாயம் எழுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்று இரட்டைவாய்க்கால் சந்தி வழியாக மணல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு இரட்டைவாய்க்கால் சந்தி மற்றும் மாத்தளன் சந்தி ஆகிய இடங்களில் இராணுவம் பொலிஸ் இணைந்த காவலரண் அமைக்கப்பட வேண்டும் என அம்பலவன்பொக்கணை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். எனினும் நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். (5-4-350)

# மாணவர்களின் போக்குவரத்து தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை தனியார் பேருந்து சங்கத்தினர் நடைமுறைப்படுத்தாதன் காரணமாக மாந்தை கிழக்கு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கான போக்குவரத்து தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் மாணவர்கள் வீடு திரும்பக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவை இடம்பெறும் என தனியார் பேருந்து சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் பேருந்து சேவை இடம்பெற வில்லை.

இதனால் மாணவர்கள் வீதிகளில் பேருந்துக்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

மாணவர்கள் வீடு திரும்புவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கையாக உள்ளது. (5-4-350)

### வவுனியாவில் இன்று

# 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது கொவிட் தடுப்பூசியாக பைசர் வழங்க சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அந்த வகையில் இன்று புதன்கிழமை கனகராயன்குளம் வைத்தியசாலையிலும் நாளை வியாழக்கிழமை புளியங்குளம் வைத்தியசாலையிலும் 10 ஆம் திகதி நைனாமடு பொதுநோக்கு மண்டபத்திலும் 13 ஆம் திகதி நெடுங்கேணி மருத்துவமனையிலும் 14 ஆம் திகதி கற்குளம் பொது நோக்கு மண்டபத்திலுமாக 5 நிலையங்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை ஏற்றப்படவுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கடந்திருப்பின் தமது தடுப்பூசி அட்டையுடன் சென்று மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக் கொள்ள முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (5-4-299)

# கிளிநொச்சியில் வீடொன்றிலிருந்து பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு



கிளிநொச்சி உமையாள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரம் சோலை நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து பெருந்தொகையான எறிகணைகள் மற்றும் வெடி பொருட்கள் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

உமையாள்புரம் சோலை நகர்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை எறிகணை வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் மேலும் சில வெடி பொருட்கள் அன்றைய தினம் அடையாளம் காணப்பட்டன. தொடர்ந்து விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த வீட்டிலிருந்தும் வீட்டு வளவுக்குள் இருந்தும் பெருந்தொகையான வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டன. (4-5-315-316)

# இன்று ஒரு தகவல்

## பெற்றவர் பொறுப்பும் மற்றவர் பொறுப்பும்

உங்கள் பிள்ளைகள் உங்கள் பார்வையில் வளரும் பிள்ளைகள், உங்கள் கண்காணிப்புக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டு நடக்கும் பிள்ளைகள் ஆகியோர் வாழ்வில் உயர்ந்தவர்களாக, சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவது இயல்பு.

விரும்பினால் போதுமா? அலாவுதீனின் அற்புத விளக்கா நம் கையில் இருக்கிறது? அதற்காக யாரேனும் முயற்சி செய்ததுண்டா என்றால் இல்லை என்றே பெரும்பாலும் சொல்லி விடலாம்.

முதலில் பிள்ளைகளிடத்தில் எத்தகைய பண்புகள் நிறைந்திருக்க வேண்டும் என்ற கருத்தில் தெளிவு வேண்டும்.

குழந்தைகளிடம் நியாயமான, நேர்மையான துணிவு இருக்க வேண்டும். வாழ்வில் எத்தகைய சிக்கல்களையும் சந்திக்கவும் எதிர்பார்த்துப் போராடி முயன்று முன்னேறவும் அது மிக அவசியம்.

அடுத்ததாக அமைய வேண்டியது தன்னம்பிக்கையாகும். குழந்தைகளிடம் குறிப்பிட்ட துறையில் அவர்களுக்குள்ள தன்னம்பிக்கையை உதாரணமாகக் காட்டி மற்றவற்றிலும் இதுபோன்றே வளர்த்துக் கொண்டால் அது எந்த அளவுக்கு உதவும் என்பதை உணர்த்த வேண்டும். ஏ்ன்னால் முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் பள்ளமும் பாறையும் மிக்க வாழ்க்கைப் பாதை பளிங்குத் தரையாலான பாதை போல் தெரியும்.

அடுத்ததாகத் தேவைப்படுவது உற்சாகம். சாதனை என்னும் வெற்றிக்கு எலும்புக்கூடு போல அடிப்படை ஆதாரமாக அமைந்திருப்பது உற்சாகமாகும். எந்தச் செயலிலும் ஓர் ஆர்வமும் விருப்பமும் ஈடுபாடும் வேண்டும். பிள்ளைகள் இவற்றைக் கடைப்பிடிப்பதற்கு எப்படியெல்லாம் உதவ முடியும் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

மற்றவர்களை மதிக்கும் பண்பைக் கற்றுக் கொடுத்து அதன் அவசியத்தை உணர்த்த வேண்டும். இவற்றைப் பின்பற்றுவதைப் பிள்ளைகள் விரும்பாவிட்டாலும் வற்புறுத்தியேனும் வரவழைக்க வேண்டும்.

தவறுகளைக் களையும் தன்மை, அவற்றைக் கண்டு விலகும் தன்மை ஒவ்வொரு சிறிய வயதினருக்கும் அமைய வேண்டும். இதுவே தலையாய பண்பாகும். தெய்வ நம்பிக்கை இதற்குக் கணிசமாக உதவும்.

கல்வியில் நாட்டம் இருக்க வேண்டும். வருங்கால வாழ்விற்குக் கல்வியின் அவசியத்தை அவர்கள் உணரும் வகையில் பெற்றவர்களும் மற்றவர்களும் நடந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய எதிர்பார்ப்பெல்லாம் அவர்களின் கல்வி மீது தான் என்பதாகப் பிள்ளைகள் எண்ணும் வகையில் அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.

எப்படியோ வளரட்டும். எல்லாம் தானாய் வந்து விடும் விபரம் தெரியத் தெரிய சரியாகிவிடும் வாழ்க்கையில் அடிபட்டால் புத்தி தானாக வரும் என்றெல்லாம் வாதம் பேசிக் கொண்டிராமல் ஆக்கபூர்வமான முயற்சிகளில் இறங்க வேண்டும்.

திட்டமிடாமல் வளர்த்தால் மேற்கூறிய அவசியத் தகுதிகளுள் ஏதேனும் சில அமையாமல் போகின்றன. வாழ்க்கை வீணாய்ப் போகிறது. இவற்றிற்கெல்லாம் பெற்றவர்களும் மற்றவர்களும் முன்னுதாரணமாய் விளங்க வேண்டும்.

மிரட்டினால் இவையெல்லாம் வாரா பற்றும் பாசமும் காட்டினால் நம் வழிக்கு வரும்.

இவை நம் இலட்சியமானால் நம் வீட்டுப் பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்!


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சுண்டெலியின் பயம்



"பலசாலிகள் ஒரே காட்டில் இருக்கக்கூடாதுஎன்பதுதான்அதன் எண்ணம்" என்றது.

முனிவர் அதைச் சிங்கமாக மாற்றினார்.

சிங்கம் ஒரு மாதம் சென்ற பிறகு, "சுவாமி, நகரத்திலிருந்து வந்த அரசன் ஒருவன், சிங்க வேட்டை ஆடினான். தப்பிப்பிழைத்தது நான் மட்டும்தான்!" என்றது.

முனிவர் சிங்கத்தை அரசனாக்கினார். அதன் பின் இரண்டு மூன்று மாதங்கள் வரை அரசன் முனிவரைப் பார்க்கவில்லை.

ஆறு மாதத்துக்குப் பின் அரசன், கிழிந்த துணிமணிகளுடன் வந்து முனிவரைப் பார்த்தான். "என்ன ஆயிற்று உனக்கு?" என்றார் முனிவர்.

"எதிரி நாட்டு அரசன் போர் தொடுத்தான். எனக்குப்போர் செய்யவே பயமாக இருந்தது. இருப்பினும் என் சார்பாக எல்லோரும் போர் புரிந்தனர்.

கடைசியில் எதிரிகள் அரண்மனைக்குள் புகுந்து என்னைக்கைது செய்தனர். பாதாளச் சிறையில் அடைத்தனர். நான் தப்பி வந்து விட்டேன்" என்றான்.

"இப்போது நான்என்ன செய்ய வேண்டும், உனக்காக எதிரியுடன் போராட வேண்டுமா?" என்றார் முனிவர். அந்த அரசன் அமைதியாக இருந்தான்.

முனிவர் சொன்னார். "சிற்றெலியாக இருந்த உன்னை அரசர் வரை உயர்த்தினேன்". ஆனாலும் உன்னுள் இருந்த எலித் தன்மை மாறவில்லை. பயத்துடனே இருந்தாய்.

"இனி, நான் உனக்கு உதவுவதற்காக எது செய்தாலும், அது உனக்கு உதவவே உதவாது. இதுவரை எலியின் மனதையே பெற்றிருக்கும் நீ, இனியும் எலியாக இருப்பதே நல்லது" என்று கூறி அரசனை எலியாக மாற்றினார் முனிவர்.

(முற்றும்)

# மகாபாரதம்




"முனிவரே! தாங்கள் கேட்டது போல பசுக்களும் பொன்னும் தருகிறேன். பொன் தேர் ஏதும் எண்ணிடம்இல்லை" என்றான் இல்வலன். "போய் நன்றாகப் பார். பொன் தேர் இருக்கிறது" என்றார் அகத்தியர்.

சென்று பார்த்த அசுரன் பொன் தேர் இருப்பதைப் பார்த்தான். பின், முனிவர் கேட்ட அனைத்தையும் வழங்கினான். அகத்தியர் ஆஸ்ரமம் திரும்பினார். இல்வலனோ மன அமைதி இழந்தான்.

அகத்தியரை கொல்ல நினைத்தான். தகவல் அறிந்த அகத்தியர் அவனைப்பார்வையாலேயே அழித்தார். உடன் வந்த மன்னர்கள் அகத்தியரிடம் விடை பெற்று நாடு திரும்பினர்.

முனிவர் தன் மனைவியை அழைத்து செல்வங்களைக் காட்டினார். லோபமுத்திரை மகிழ்ச்சி அடைந்தாள்.

பின் அகத்தியர் அவளிடம் "உனக்கு எத்தனை மகன்கள் வேண்டும்? ஆயிரமா.. அல்லது அத்துணை வன்மை பொருந்திய நூறு பிள்ளைகள் அல்லது நூறு பிள்ளைகளுக்கு இணையான பத்துப் பிள்ளைகள் அல்லது அத்துணை வன்மையும் மிக்க ஒரு பிள்ளை வேண்டுமா? உன் விருப்பத்தைத் தெரிவி" என் றார்.

அனைத்துச் சிறப்பும் பொருந்திய ஒரு மகன் போதும் என்றாள் லோபமுத்திரை. அவளுக்கு வேதங்களையும், உபநிஷதங்களையும் ஓதிய படியே ஒரு மகன் பிறந்தான்.

அக்குழந்தைக்கு த்ருடஸ்யு என்ற பெயர் இட்டனர். பிறந்ததுமே பல்வானாகத் திகழ்ந்த அக்குழந்தை தந்தையின் ஹோமத்திற்காக வேண்டிய ஸமித்தினைச் சுமை சுமையாகக் கொணர்ந்தது. இதனால் இத்மவாஹன் என்னும் பெயர் பெற்றான்.

மகனின் ஆற்றலையும் அறிவையும் கண்டு அகத்தியர் மகிழ்ந்தார். அவரது முன்னோர்கள் அனைவரும் விரும்பிய சுவர்க்கம் அடைந்தனர். அப்புத்திரனால் அகத்தியர் ஆஸ்ரமமும் உலகப் பிரசித்தி அடைந தது என லோமசர் கூறி முடித்தார்.

இக்குழந்தையினால் பெருகிழும் அடக்கமின்மையும் குலத்தைக் கெடுத்துவிடும் என உணரலாம்.

### தருமவியாசர் உரைத்த நீதிகள்

கௌசிகன் என்பவன் சிறந்த அந்தணன். வேதத்தில் வல்லவன். எப்போதும் தவத்தை மேற்கொண்டிருப்பவன். ஒரு நாள் வேத மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு மரத்தடியில் அமர்ந்திருந்தான். அப்போது மரத்தின் மீது அமர்ந்திருந்த ஒரு கொக்கு அவன் மீது எச்சமிட்டது.

அதனால் கோபம் கொண்ட அந்தணன் அந்தக் கொக்கை தீ உமிழும் கண்களால் நோக்க அந்த வெம்மையைத்தாங்காது அக்கொக்கு எரிந்து தரையில் விழுந்தது. அந்தணன் பறவையின் முடிவு கண்டு வருந்தினான். பிறகு பிச்சைக்காகக்கிராமத்தை அடைந்தான்.

ஒரு வீட்டின் வாயிலில் நின்றவாறு "தாயே பிச்சை தருக" என்றான். அவ்வீட்டுப் பெண் மணி சிறிது நேரம் பொறுத்திருக்கக் கூறினாள். பசியுடன் வீட்டிற்கு வந்த கணவனைக் கவனிப்பதில் ஈடுபட்டாள். கணவனையே தெய்வமாகக் கொண்ட அந்தப் பெண் சொல்லாலும், செயலாலும் எப்போதும் கணவருக்கு மகிழ்ச்சியையே தருவாள்.

பிச்சைக் கேட்டு வந்த அந்தணனை நீண்ட நேரம்காக்க வைத்த ற்கு வருந்தினாள் "பெண்ணே என்னை வேறிடத்திற்குச் செல்ல முடியாதவாறு செய்துவிட்டாயே" என சீறினான். கௌசிகனின்சினம்கண்டு வருந்தியவள், "கணவனுக்கு பணி விடை செய்துவர நேரமாகிவிட்டது. மன்னிக்கவும்" என்றாள்.

அந்தணனும் கோபத்துடன் "உனக்கு உன் கணவனைத்தவிர வேறு யாரும் உயர்வில்லை போலும். தேவாதி தேவனே எங்களைப் போற்றுகிறான். நீ எம் மாத்திரம்.

வேதவித்தாகத் திகழும் என் பெருமையை நீ அறியாய். அந்தணர்கள் சரியாக மதிக்கப் படாவிடின்எரித்து விடுவர்"என்றான்.

உடன் அவள் கூறினாள் "மாமுனியே! சினத்தை அடக்குவாயாக. என்னை சுட்டு எரிக்க நான் கொக்கு அல்ல. காலம் தாழ்த்தி வந்தமைக்கு மன்னியுங்கள். நான் உத்தமர்களை என்றும் பழித்ததில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமில்லாமல் விதைக்கப்பட்ட விதை பயன்படாதது போல், முயற்சியில்லாத ஊழ்வினையும் பயன்படாது. செய்வினை பூமியாகவும் ஊழ்வினை விதையாகவும் கருதுக. – *வாரியார்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போக்குவரத்து நெருக்கடி மீது கவனம் செலுத்துங்கள்

தெருவில், கடலில் எங்கள் அருமந்த பிள்ளைகள் பலியாகிப் போகின்ற நெட்டூரம் நீண்டு செல்கிறது.

நாள்தோறும் நடக்கின்ற விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தடுப்பாரும் தட்டிக்கேட்பாருமின்றி பல்கிச் செல்கிறது.

புகையிரத வண்டி மோதி இளம் குடும்பஸ்தர் மரணம். வீதியைக் கடக்க முற்பட்ட மாணவியை முட்டி மோதி பலியெடுத்த வாகனம், வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி அந்த இடத்திலேயே இரண்டு இளைஞர்கள் பரிதாப மரணம் என்ற செய்திகளுக்குக் குறைவே இல்லை.

ஆனாலும் சம்பந்தப்பட்ட குடும்பங்களைத் தவிர, மற்றவர்களுக்கு அது ஒருபொழுதுச் செய்தி மட்டுமாகவே இருக்கிறது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், இப்போது கடலிலும் குளத்திலும் குளிக்கச் சென்று வெள்ளத்தில் – சுழியில் அகப்பட்டு உயிரிழந்து போகின்ற சம்பவங்கள் இதயத்தைக் கருக்குகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக் கடலில் குளிக்கச் சென்ற மூன்று இளைஞர்கள் ஒன்றாக இறந்து போயினர் என்றால், அதைவிட்ட கொடுமை வேறு என்னவாக இருக்க முடியும்.

அந்தோ! பரிதாபம். பெற்று வளர்த்து ஆளாக்கி கடைசிக் காலத்தில் எங்களை கவனிப்பான் என்றிருக்க, அந்தப் பிள்ளை நண்பர்களுடன் குளிக்கச் சென்று சடலமாக வீடு வருகிறது என்றால், அந்தக் குடும்பத்தின் நிலைமை எப்படியாக இருக்கும் என்பதை இன்றைய இளம் பிள்ளைகள் இம்மியும் உணர்வதாகத் தெரியவில்லை.

இவ்வாறான சூழ்நிலைகளுக்குக் காரணம் என்ன? என்று ஆராய்கின்றபோது பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் அவர்களின் கவனிப்பில் பிள்ளைகள் இல்லை என்பதைக் கண்டறிய முடியும்.

இத்துரதிர்ஷ்டமானதொரு சூழமைவு நீண்டு நிலைக்குமாயின் அதன் விளைவு மிகப்பெரும் துன்பமாக அமையும் என்பதை மட்டும் எச்சரிக்கையுடன் கூறிக் கொள்ளலாம்.

இவை ஒருபுறமிருக்க, வடபகுதியில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசல் தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

பாடசாலைகள் நிறைவடைகின்ற நேரத்தில், அதிகளவு பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலைகளுக்கு முன்பாக போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட வேண்டும்.

ஆனால் பல வேளைகளில் குறித்த இடங்களில் போக்குவரத்துப் பொலிஸாரைக் காண முடிவதில்லை.

தவிர, பாடசாலை நிறைவு நேரத்தில் கனரக வாகனங்கள் குறித்த பாடசாலை வீதிகளில் பயணிப்பதனால், நிலைமை மேலும் மோசமாகிறது.

எனவே இது விடயத்தில் போக்குவரத்துப் பொலிஸார் அதீத கவனம் செலுத்தி, நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும்.

இல்லையேல் பாரிய வீதி விபத்துக்கள் எந்நேரமும் ஏற்படக்கூடியதான கட்டங்கள் உருவாகலாம். கவனம்.

# ஜி.எஸ்.பி வரிச்சலுகை நிறுத்தப்பட்டால் நாட்டில் மீன்பிடித் துறை பாதிக்கப்படும்

## பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் நாட்டிற்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நிறுத்தப்படும் பட்சத்தில் மீன்பிடித் துறையில் பாரிய தாக்கங்கள் ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு குறிப்பிடத்தக்களவிலான வரிச்சலுகை அளிக்கப்படுகின்றது.

இருப்பினும் கடந்த 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் போராடிப் பெற்றுக்கொண்ட அந்த வரிச்சலுகையை மீண்டும் இழக்கும் நிலையில் நாடு இருக்கின்றது.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தூரநோக்கு சிந்தனையின்றி இரசாயன உர இறக்குமதியை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் சடுதியாக மேற்கொண்ட தீர்மானத்தினால் தற்போது விவசாயிகள் மிகமோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி நாட்டின் உணவுப் பாதுகாப்பு முற்றுமுழுதாகக் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-3)

## சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மீது நேற்று செவ்வாய்க்கிழமை காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி தபால் நிலைய வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற நகர சபை உறுப்பினர் தபால் நிலையத்திற்குள் மோட்டார் சைக்கிளை திருப்பிய வேளையில் அவருக்கு பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டினை இழந்து வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த குறித்த இளைஞன் நகர சபை உறுப்பினர் மீது நடுவீதியில் வைத்து தாக்குதல் நடத்தியதுடன் அவரிடம் இருந்து இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் பறித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம் என்ற முகவரியில் வசித்து வரும் சாவகச்சேரி நகர சபை உறுப்பினரான 72 வயதான க.வேலாயுதபிள்ளை என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## ஜனாதிபதி கோட்டா தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை கூட்டம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபை, நேற்று பிற்பகல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியின் முதலாம் இலக்க அறையில்கூடியது.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபைத் தலைவர் என்ற ரீதியில், இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகப் பாராளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன மற்றும் ஆளுங்கட்சியின் பிரமத கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்போதைய பாதுகாப்புப் பிரிவினரின் அவதானத்துக்கு இலக்காகியுள்ள விடயங்கள் தொடர்பில், அமைச்சர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த பிரச்சினைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் அதிகாரிகள், இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

வியாழன் காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக் பிரதேசத்திலும்

## எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு விவகாரம்

### சி.ஐ.டி. இல் முறைப்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 600 எரிவாயு சிலிண்டர்கள் வெடித்திருக்கின்றன.

இதுகுறித்து உரியவாறு விசாரணைகளை முன்னெடுப்பதுடன் குற்றமிழைத்த தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளித்துள்ளனர். (ம-3)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

'பத்தர்கள் இறைவனை நினைப்பதில்லை. நேரம் கிடைத்தால் போதும், வம்பளப்பார்கள் அல்லது பயனற்ற வேலைகளைச் செய்வார்கள். காரணம் கேட்டால், என்னால் சும்மா இருக்க முடியாது. அதனால்தான் இந்த வேலியைக் கட்டிக் கொண்டிருக்கிறேன்" என்பார்கள். பொழுது போகாவிட்டால் சீட்டாடத் தொடங்கி விடுவார்கள்.' (அனைவரும் வியப்புடன் கேட்டபடி அமைதியாக அமர்ந்திருந்தனர்.)


ஒரு பக்தர்: 'சுவாமி, இப்படிப்பட்ட இல்லறத்தான் கடைத்தேற வழியே இல்லையா?' ஸ்ரீராமகிருஷ்ணர்: 'நிச்சயமாக இருக்கிறது. அவ்வப்போது சத்சங்கம் வேண்டும், அவ்வப்போது தனிமையில் வாழ்ந்து இறைவனைச் சிந்திக்க வேண்டும். அதோடு ஆராய்ச்சி செய்ய வேண்டும். எனக்கு பக்தியும் நம்பிக்கையும் கொடு" என்று ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வனத்தில் உயிர் பல்வகைமை ஆய்வு முன்னெடுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திண்ணை குழுமம் மற்றும் சி.சி.எச்.நிறுவனம் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ள சுண்டிக்குளம் தேசிய வனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கிலான உயிர் பல்வகைமை ஆய்வு முன்னெடுப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் திண்ணை விடுதியில் இடம் பெற்றது.



சி.சி.எச்.நிறுவனத்தின் நிறுவுனர் ரீ.ரீ.மயூரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, திண்ணை குழுமத்தின் தலைவர் ஞானம் ஜெயசீலன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன், விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ்.வசந்தரூபா, ஆய்வுக் குழுவின் இணைப்பாளர் பேராசிரியர் க.சுஜபதி, விவசாய ஆய்வு நிலைய பணிப்பாளர் எஸ். ராஜேஸ்கண்ணா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இரட்ணம் செந்தில்மாறன், வனவளப் பாதுகாப்பு திணைக்கள பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சுண்டிக்குளம் தேசிய வனத்தின் உயிர் பல்வகைமை ஆய்வின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கில் விரிவுபடுத்தக்கூடிய வாய்ப்புக்கள், சுற்றாடல் பாதுகாப்பு, சூழல் நேய அணுகு முறைக்கான ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்கள், இவற்றில் சிறுவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்கள், பிராந்தியத்தில் காணப்படும் உயர்தர உயிர் பல்வகைமை தொடர்பான அறிவு விருத்தி என்பன தொடர்பில் முதலாம் கட்ட ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (5-33-18)

# வவுனியாவில் ஒரே இரவில் 5 கடைகளில் திருட்டு

(நெளுக்குளம்)

வவுனியா நகரப்பகுதியில் 5 விற்பனை நிலையங்களில் ஒரே இரவில் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வவுனியா மில் வீதி, சூசைப்பிள்ளையார்குளம் வீதி, கந்தசாமி கோவில் வீதி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களின் கூரை த்தகடு மற்றும் வாயிலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த கடைகளை அதன் உரிமையாளர்கள் மூடிச்சென்று மீண்டும் திறப்பதற்காக நேற்றுக்காலை வருகைதந்தபோது கடைகள் உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்தனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த கடைகளில் இருந்து பல இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக சி.சி. ரி.வி. கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# இலவச மருத்துவ முகாம்



(முறிகண்டி)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நேற்று வாடியடி புனித மரியன்னை ஆலயத்தில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக மத வழிபாட்டுத்தலங்களில் கடமை புரியும் மதகுருமார்கள், மற்றும் ஊழியர்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவையில் பொதுமக்களும் கலந்துகொண்டு சிகிச்சைகளையும் மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர்.

குறித்த நடமாடும் சேவைக்கான அனுசரணையை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-100-315-316)

# வவு.தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2022 பாதீடு நிறைவேற்றம்

(நெளுக்குளம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் த.யோகராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

சபையில் பிரசன்னமாகியிருந்த இரு உறுப்பினர்கள் பாதீட்டுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்ததுடன் வாக்கெடுப்பிற்கு செல்லுமாறு தெரிவித்தனர்.

ஆயினும் அநேகமான உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவான கருத்துக்களை தெரிவித்தனர். இந்நிலையில் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது. (4-5-299)

# கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

கொக்குவில் கிழக்கு யாழ்.விஷன் இந்து மன்றம் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள காசிவிஸ்வநாதர் விசாலாட்சி ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.52 மணி முதல் 7.45 மணி வரை யுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (4-5-18)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால்

# சிறுவர் இல்லத்திற்கு 10 லட்சம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

பதுளை மாவட்டத்தில் இயங்கிவரும் சிறுவர் இல்லத்திற்கு 10 இலட்சம் ரூபாய் நிதி உதவியினை யாழ்.தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் வழங்கியுள்ளார்.

ஊவா மாகாணத்தின் பதுளையில் பெண் பிள்ளைகளுக்கான மலையக சிறுவர் இல்லம் தற்காலிக வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இந்நிலையில் சிறுவர் இல்லத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் மலையக சிறுவர் இல்ல நிர்வாகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பதுளை மலையக சிறுவர் இல்ல கட்டட அமைப்பு பணிகளை நேரடியாக சென்று பார்வையிட்ட மோகனதாஸ் சுவாமிகள் பத்து இலட்சம் ரூபாய் நிதியினை சிறுவர் இல்ல நிர்வாகத்தினரிடம் கையளித்தார். (4-5-60-104)

# நல்லூர் பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

(குப்பிழான்)

நல்லூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 4 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டைச் சபையில் சமர்ப்பிப்பதற்கான கூட்டம் தவிசாளர் ப.மயூரன் தலைமையில் நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது.


சபையில் இடம்பெற்ற நீண்ட வாதப் பிரதிவாதங்களைத் தொடர்ந்து வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதன்போது 20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் 12 உறுப்பினர்கள் ஆதரவாகவும், எதிராக 08 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இந்நிலையில் 4 மேலதிக வாக்குகளால் பாதீடு நிறைவேற்றப்பட்டுள்ளது. (4-5-18-33)



யாழ்ப்பாணம் - கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் ஆலயத்தின் மகரஜோதி மண்டல விரத மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம் :-சிவசாந்தன், கஜிந்தன்)



வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு மில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இரு தினங்கள் இடம்பெற்றது. நீதிச்சேவை அமைச்சின் கீழ் உள்ள மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் ஆசிய வங்கியின் நிதி உதவியுடன் குறித்த செயலமர்வு இடம்பெற்றது. (படம்:-வசந்தரூபன்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணி (Bachelor of Natural Sciences) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் கணிதம் மற்றும் உயிரியலில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 14.01. 2022 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவோ மற்றும் 021222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 21 பேர்...

றினால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கோவிட்-19 தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,505 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-03)

## சங்கானை...

10 மணிக்கு கொண்டாட்டம் ஒன்றிற்கு சென்றுவிட்டு, மாலை வீட்டிற்கு வந்து வீட்டினை அவதானித்துள்ளனர்.

இதன்போது கதவு உடைத்து நகை களவாடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-03,104)

## 5 எரிவாயு...

நண்பகலளவில் எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

குடியிருப்பாளர்கள் காஸ் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்தபோது, திடீரென காஸ் அடுப்பு வெடித்ததால், காஸ் அடுப்பு பலத்த சேதம் அடைந்தது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் நுவரெலியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## வீடு ஒன்றுக்கு...

ஒன்றை முன்வைத்துள்ளது.

அந்த அமைச்சின் ஊடக பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இதனை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

மின் பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாகவும் உரிய முகாமைத்துவத்துடனும் பயன்படுத்த வேண்டும்.

வீடு ஒன்றுக்கு ஒரு மின்குமிழை அணைக்க முடிந்தால் நாள் ஒன்றுக்கு 7 மில்லியன் மின்குமிழ்களை அணைக்க முடியும்.

அதாவது வீட்டில் தேவையற்ற இடத்தில் ஒளிரும் மின்குமிழைதான் சொல்கிறேன். மின்சாரத்தை சேமிப்பது என்பது குறுகிய காலத்தில் செய்ய வேண்டிய ஒன்றல்ல. இது ஒரு பழக்கமாக, நம் வாழ்வின் ஒரு பகுதியாக நாம் செய்ய வேண்டிய ஒன்று என்றார். (ம-03)

## மாதகலில்...

ஊடகவியலாளர்களுக்கும் கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் எழுந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் நேற்றைய தினம் மாதகல் பகுதி மக்கள், கஞ்சா கடத்திய சந்தேகத்தில் நேற்று முன்தினம் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதற்கு எதிராக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மற்றும் மக்களை அங்கிருந்த ஒருவர் காணொளி எடுத்துள்ளார்.

இதன்போது அங்கிருந்த மக்கள் அவரை நோக்கி "நீங்கள் யார் எதற்கு எங்களை காணொளி எடுக்கிறீர்கள்?" என கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் தான் ஒரு ஊடகவியலாளர் எனக் கூறினார். அதற்கு அங்கிருந்தவர்கள் ஊடகவியலாளர் என்றால் ஊடகவியலாளரின் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கூறினர். இருந்தும் அவர் அடையாள அட்டையை காண்பிக்காமல் அங்கிருந்து நகர்ந்தார். (ம-03,104)

## மாதகலில் காணி...

கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு ஆதரவாக அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த இருவரும் கடலுக்கு சென்று திரும்பிவரும் வேளையில் கடற்படையினர் அவர்களை வழிமறித்தனர்.

இதன்போது கடற்படையினரின் கட்டளைக்கு கட்டுப்பட்டு அவ்விடத்தில் நின்றனர். இந்நிலையில் கடலில் மிதந்து வந்த, சுமார் 276 கிலோ கஞ்சாவை அவர்கள் கடத்தியதாக தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பயணித்த படகு சிறியது. அந்தப்படகில் தொழில் முதல்கள் இருந்தன. இந்நிலையில் 276 கிலோ கஞ்சாவை எவ்வாறு அந்த படகில் கொண்டு வருவது?

அத்துடன் அவர்கள் பயணித்த படகின் ஜி.பி.எஸ்ஸினை பார்த்தால் அவர்கள் எங்கு சென்றுள்ளார்கள்? கஞ்சா கடத்தும் இடத்துக்கு சென்று உள்ளார்களா? என தெரியவரும். கைது செய்யப்பட்டவர்களை கடற்படையினர், "நீங்கள் காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தானே" என ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியுள்ளனர். நாங்கள் அவர்களைப் பார்க்கச் சென்றவேளை அவர்கள் எமக்கு விடயத்தை கூறியுள்ளார்கள்.

எனவே கைது செய்யப்பட்டவர்களை சரியாக விசாரணை செய்து உண்மைத் தகவலை வெளிப்படுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ம-03,104)

## எதிர்க்கட்சி...

தில் இருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனை என்னிடம் தொலைபேசியில் கூறினார்.

இந்நிலையில், தனது எதிர்க்கட்சி தலைவர் பதவி பறிபோகும் என்கிற அச்சத்தில் உள்ள சஜித் பிரேமதாஸ, சபை நடவடிக்கைகளில் விரைவாக கலந்து கொள்வார் எனவும் தெரிவித்தார். (ம-03)

## ரணில் வருகை...

தலைமையிலான அணியினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றம் வருகை தராத நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபை நடவடிக்கையில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## நாட்டை...

2015 முதல் 2019 வரை நாட்டுப் பொருளாதாரம் எப்படி இருந்தது என ஆளுங்கட்சியினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே ரணில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அக்காலப்பகுதியில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது. மக்களின் வருமானம் குறையவில்லை. தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இன்று அந்நிலைமை இல்லை. மக்களும் அந்தக் காலமே போதும் என தற்போது எண்ணுகின்றனர்" என்றும் ரணில் குறிப்பிட்டார். (ம-03)

## +748...

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 567,697 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## வட...

உயிரிழந்துள்ளார்.

83 வயதான அவர் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக வைத்தியசாலையின் அதிதீவிர பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடாக அரசியலுக்குள் பிரவேசித்த அவ்ஊவா மாகாண ஆளுநராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பண்...

வான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாக குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

சுகாதார சட்டத்தை மீறி பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும் அவ்வாறான இடங்களுக்குள் பிரவேசித்து சுகாதார சட்டத்தை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-03)

## நுண்கடன்...

கள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் கிராமப்புற பெண்களின் உயிரைப் பறிக்கும் நுண்கடன் திட்டம் ஏற்படுத்திய அழிவின் அளவு அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் நாட்டிற்கு வந்த ஐ.நாவின் விசேட தூதுவரால் வெளிப்படுத்தப்பட்டது.

"கடனுக்கு அதிக வட்டி விகிதங்கள் வசூலிக்கப்படுவதால் பல பெண்கள் கடனுக்கு இரையாகிறார்கள். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 200இற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது," என சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் டொமோயா ஒபோகடா கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், கல்வியாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சுரண்டலுக்கு ஆளானவர்கள் ஆகியோரை அவர் சந்தித்ததாக, ஐ.நாவின் இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மெகா பவர்
திகதி 07/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0957
W 18 36 57 70 76

சுபிரி வாசனா
2021/12/07 1643
05 34 44 46 50

மஹஜன சம்பத
திகதி 2021/12/07
சீட்டிழுப்பு இலக்கம் 4609
Y 7 5 7 0 0 1

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 07.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2904
H 02 21 43 80

தன நிதானய
திகதி - 2021.12.07
சீட்டிழுப்பு இலக்கம் - 639
I 27 63 78 81

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1412
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 5,100,240
சீட்டிழுப்பு திகதி 07.12.2021
31 58 73 75 O

சனிதா
சீட்டிழுப்பு இல: 3747
சீட்டிழுப்பு திகதி 07.12.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 5,092,520
09 16 30 75 W

Y 15 28 41 65
775
07.12.2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,821,540/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1586
சீட்டிழுப்பு திகதி 07.12.2021
M 10 13 24 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் - 73,602,498/=

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,196,835/=
திகதி 07.12.2021
வெற்றி வாரம் 3298
வெற்றி இலக்கங்கள் 12 36 54 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,156,100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3132)

0768226240 DHL



## காணி விற்பனைக்கு

கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து
500 M தூரத்தில் 6 பரப்பு காணி விற்பனைக்கு.
1½ பரப்பாக பிரித்து வழங்கப்படும்.
**(உரும்பிராய் கிருஸ்ணன் கோவில் சந்தி அருகாமை)** (8976)

**077 658 5999, 077 911 6983**



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
1 221 7603, 021 567 1532



## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பேப்பர்
ஹவுஸ் நிறுவனத்திற்கு பின்வரும்
வேலையாட்கள் தேவை.

- சிட்டை எழுதுனர்
- கணக்குப் பதிவாளர்
- விற்பனையாளர்

20,000/= க்கு மேல்
சம்பளம் வழங்கப்படும். (C-3195)

தொடர்பு: **021 222 5343**



## வரன் தேவை

உயர் சைவ மரபில் பிறந்து 29 வயதாகும் சுவிற்சர்லாந்தில்
பிறந்து பிரஜா உரிமையுடன் டாக்டராகப் பணி புரியும் நன்கு
தமிழறிவுடைய பெண்ணுக்குப் பொருத்தமான வரனைப்
பெண்ணின் பெற்றோர் தேடுகிறார்கள்.
தொடர்புகளுக்கு Whtsapp மூலம் sms இல்
தொடர்புகொள்ளவும். **(தூரகர் +41 77 969 59 02)** (C-3186)



## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நகைக்
கடைக்கு ஆண்/ பெண்
வேலையாட்கள் தேவை.

## சுத்திகரிப்பாளர் தேவை

வீட்டுச் சுத்திகரிப்பு வேலைக்கு
ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு (C-3194)

**077 773 0567**



## உடனடி வேலை வாய்ப்பு

நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால்
வேலையிழந்தோருக்கும் புதிதாக வேலை தேடுபவர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்! எமது Entrepreneurs நிறுவனத்தினூடாக
வழங்கப்படவுள்ளது. வட மாகாணத்தில் **(கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம்)** ஆரம்பிக்கப்படவுள்ள 10
கிளைகளுக்கு 75 இற்கு மேற்பட்ட பதவி வெற்றிடங்களை
பூர்த்தி செய்யப்படவுள்ளதால் **(மேற்பார்வையாளர், அலுவலக உத்தியோகத்தர், உதவி முகாமையாளர், கிளை முகாமையாளர்)**
தங்களது தகுதிகாண் மூலப்பிரதிகளுடன் நேர்முகத் தேர்வில்
கலந்துகொண்டு உங்கள் தகுதிக்குரிய வேலை வாய்ப்பினை
பெற்றுக்கொள்ள முடியும். 10, O/L, A/L கல்வித் தகைமை
உடையோர் கலந்து கொள்ளலாம். (8974)

**021 722 3317**
**077 384 7988**
**076 240 1559**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம்,
கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி,
முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப்
பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (8973)



## விற்பனைக்கு

- Honda Benly 125 CC
- Honda CM 250 CC (unregistered)

(8969)

**077 899 6552**
**077 899 9083**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில்
கணக்கர் வளவு 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(நிலப்புரப்பு)**
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (8670)

**077 814 7389, 077 614 7333**



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா
விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா
ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-3169)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா
ஜெர்மனி பிரான்ஸ்
லண்டன் சுவிஸ்
அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS

**0777-068-777**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்


யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி
நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்
துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப்
பார்த்து வங்கியிலேயே பணத்தைத்
தந்து வாங்கப்படும். (8596)

**076 825 7716** (ஆகாஸ்)


# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## நன்றி நவிலலும்




கடந்த 08.11.2021 அன்று திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் கலாநிதி ஆறுமுகம் சிவசம்பு விவேகானந்தன்


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.12.2021) புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

எங்களது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த சகல உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள், பல்வேறு வழிகளில் உதவிய உறவினர்களுக்கும் அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்களது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இல. 5/1, றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.** (8947)

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## தம்பித்துரை சஞ்சீவ்ராஜ் (குட்டி)

றாஜ்குடில், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சஞ்சீவ்ராஜ் (குட்டி) கடந்த 23.11.2021 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்) மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்புப் புதல்வனும் கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்) - காந்தரூபி தம்பதியரின் மருமகனும் தர்சினி அவர்களின் பாசமிகு கணவரும் ராதவி, சாதனா, கவின்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் புவிராஜ் (கனடா), பிருதுவிராஜ் (லண்டன்), சண்முகராஜ் (கனடா), பகீரதராஜ் (ஆசிரியர் - யா/புனித சாள்ஸ் ம.வித்தியாலயம்), சுகுணராஜ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.12.2021) புதன்கிழமை இங்கிலாந்து நேரப்படி 8.00 - 12.00 மணிவரை இடம்பெற்று பூதவுடல் 12.40க்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.** (C-3193)

*தகவல்:*
**ந.பகீரதராஜ் (சகோதரன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.